உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௧௭.] சித்தார்த்தி௵ சித்திரை௴ [பகுதி ௬
Vol. XVII. April—May, 1919. No. 6.

## 13-வது
## புறப்பாட்டும் உரையும்.-I *

உத்தேசம் ஒருவருஷத்திற்கு முன்னால் 'சேரர்தம் புராதனவஞ்சி மாநகர் யாது?' என்பதைப்பற்றி யொருபெரும் விவாதம் நிகழ்ந்ததை 'செந்தமிழ்' நேயரனைவரும் அறிவர். அந்நகர் மேல்கடற்கரைக்கண்ணதாகிய கொடுங்கோளூரே யென வொருசாராரும் உள்நாட்டதாகிய ஆனிலைக்கருவூரேயென மற்றொருசாராரும் வாதியாநின்றனர். தூத்துக்குடி வக்கீல் ஸ்ரீ. சோமசுந்தரபாரதியவர்கள் கொடுங்கோளூர்க் கக்ஷியை ஸ்தாபித்துச் 'சேரர்பேரூர்' என்றவொரு நூலெழுதி வெளியிட்டார்கள். சேதுசமஸ்தான வித்வான் ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள் பாரதியவர்கள் கூறியிருப்பனவற்றை மறுத்து ஆனிலைக் கருவூர்க் கக்ஷியை வற்புறுத்த 'வஞ்சிமாநகர்' என்ற ஆராய்ச்சியுரை யொன்று பிரசுரித்தார்கள். இவ் ஆராய்ச்சியுரையுள்ளே, 13-வது புறப்பாட்டினையும் அதன் உரையினையும் எடுத்துக்கொண்டு அவை கொங்கிற் கருவூரே வஞ்சியா மென்பதைச் சந்தேகமற விளக்குகின்றன என்று ஐயங்காரவர்கள் தெளிவுறக்காட்டினார்கள். 'இவ்வரிய புறப்பாட்டு கருவூர்த் திசையறியாது அலையும் நெஞ்சமாகிய மரக்கலத்தைக்கொண்டுழலும் நல்லுயிராகிய மீகானுக்கு அவியாத கலங்கரை விளக்குப்போல விளங்குவதாகும்' என்று அவர்கள் தாமே எழுதியிருப்பதால் அவர்களது கொள்கைக்கு இப் புறநானூற்றுச் செய்யுளை யொருபிரபல ஆதாரமாக்கொண்டார்களென்பது உணரலாகும்.

* (இஃதொருதலைமுடிவாதலா லிதன் மறுதலைமுடிவும் அடுத்துள்ளது.- ப-ர்.)

2. இப்பால், இருதிறத்தார்களது கொள்கைகளையும் நடுநின்றாராய்தற்குச் 'செந்தமிழ்ப்' பத்திராசிரியரவர்கள் முன்வந்தார்கள். இவர்கள், ஸ்ரீ. ராகவையங்காரவர்களுக்குப் போதரவாக அமைந்த புறப்பாட்டினை ஆராயப்புகாது 'விழுநீர்வேலிநாடுகிழவோன்' என அச்செய்யுளிற்பயின்றுள்ளதொடர் சேரனைக்குறிப்பதாகுமென்றுமட்டும் எழுதினார்கள். இத்தொடர் சேரனைக்குறிப்பதன்றெனவொருசிலர் ஆசங்கை நிகழ்த்தவே, பதின்மூன்றாம் புறப்பாட்டின் பொருளை ஐயமின்றிச் செவ்வனே யுணர்தற்குப் பெருந்துணையாமெனக்கருதி 21 வினாக்களைப் பத்திராசிரியரவர்கள் விடுத்தார்கள். இவ்வினாக்களும் ஆசங்கைகளை முற்ற நீக்குதற்குப்போதிய ஆற்றலிலவா யொழிந்தன. கடைசியாக மாணவநண்பரொருவர் 'இவனியார் என்னும் புறப்பாட்டாராய்ச்சி' யென்ற நுணுகிய ஆராய்ச்சியுரையொன்று வெளியிட்டனர். (செந்தமிழ் XVI, v-252-264.) இது பத்திராசிரியர் விடுத்த கேள்விகட்கு அவர்கள் தாமே கருதிய விடையாக அமைந்துள்ளதென்பது இவ்விரண்டினையும் ஒத்து நோக்கினார்க்கு நன்கு புலப்படும். இவ்வரிய ஆராய்ச்சியுரை யெழுதியோர் இன்னாரெனப் பெயர்மாத்திரையேனும் அறியும் பாக்கியம் நமக்கில்லாதுபோயினும் அவரது ஆராய்ச்சி வன்மையால் அவரொரு வித்வசிகாமணியாயிருத்தல்வேண்டுமென்பது எளிதில் ஊகித்தல் கூடும்.

3. யான் இனியெழுதுவனவற்றை நன்குணர்தற்கு 13-வது புறப்பாட்டாராய்ச்சியின் சரிதம் இன்றியமையாததாமாகலின், அதனையொருவாறு சுருக்கி இங்கே கூறினேன். கொங்குநாட்டு ஆனிலைக் கருவூரே சேரரது புராதன வஞ்சியாமென்று நிலையிடுதற்கு உளவாம் ஆதாரங்கள் பலவற்றுள் ஒன்றாக இப்பாட்டு முளைத்தெழுந்து பின்பு பனைத்தோங்கி வளர்ந்து ஆராய்ச்சி செய்யப்புக்காரது கவனத்தை யெல்லாம் ஒருங்கே தன்பால் ஈர்த்துக்கொண்டது. சேரர் தலைநகர் இதுவென ஆராய்ந்து முடிவுகாண யான் ஈண்டு முயலவில்லை. அஃது எனது நோக்கமுமன்றாம். நமக்கிப்போதகப்பட்டிருக்கும் இலக்கியங்களிலுள்ள குறிப்புக்களை மாத்திரம் கொண்டு இச்சரித்திர விஷயத்தைத் தீர்மானித்தல் கூடாதாகும். ஆகவே 13-வது புறப்பாட்டின் பொருள் இன்னதென்று நிச்சயித்தலும் மாணவ நண்பர் தம் ஆராய்ச்சியுரையிற் கூறியிருப்பன எத்துணைப் பொருத்தமுள்ளனவென்று ஆராய்தலுமே எனது கருத்தாம்.

முதலில், 13-வது புறப்பாட்டினையும் அதன் பழையவுரையினையும் பன்முறையும் வாசித்துக்கொள்ளுதல் மிகவும் பயனுடையதாகும். அவை வருமாறு:—

"இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
வெய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலியன்ன களிற்று மிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பட் டிங்கள் போலவுஞ்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே."

"திணை-பாடாண்டிணை; துறை-வாழ்த்தியல்

சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக்கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையொடு வேண்மாடத்துமேலிருந்து உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

இ-ள்—இவன் யாரென்று வினவுவாயாயின், இவன்றான், புலியினது தோலாற் செய்யப்பட்ட மெய்புகு கருவி பொலிந்த கோளுத்தற எய்த அம்புகள் போழப்பட்ட பரந்துயர்ந்த மார்பினையுடைய கூற்றம் போன்றகளிற்றின் மேலோன்; இக்களிறுதான், கடலின் கண்ணே இயங்கும் மரக்கலத்தை யொப்பவும் பலமீனினது நடுவே செல்லும் மதியத்தை யொப்பவும் சுறவினினத்தைத யொத்த வாண்மறவர் சூழத் தன்னை மருவிய பாகரையறியாது மதம்பட்டது; இவன் நோயின்றிப் பெயர்வானாக; வயலிடத்து மயிலுதிர்த்த பீலியை ஆண்டுள்ள உழவர் நெற்சூட்டுடனே திரட்டும் கொழுவியமீனையும் விளைந்தகள்ளையுமுடைய மிக்க நீராகிய வேலியையுடைய நாட்டையுடையோன்.—எ-று.

களிற்றுமிசையோனாகிய இவன், யாரென்குவையாயின், நாடு கிழவோன்; இவன்களிறு மதம்பட்டது; அதனால், இவன் நோயின்றிப் பெயர்கவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

களிற்றுக்கு நாவாயோடு உவமை எதிர்ப்படையைக்கிழித்தோடலும், திங்களோடு உவமை வாளோர்சூழத் தன் நல்லமை தோன்றச் செல்லுதலுமாகக் கொள்க. தில்-விழைவின்கண் நின்றது.

பெருநற்கிள்ளி களிறு கையிகந்து பலகையகத்துப் புகுந்தமையான் அவற்குத் தீங்குறுமென்று அஞ்சி வாழ்த்தினமையால், இது வாழ்த்தியலாயிற்று; இவற்குத் தீங்குறின் நமக்குத் தீங்குறுமென்னுங் கருத்தால் நோயிலனாகிப் பெயர்கவென்றாராயின், வாழ்த்தியலாகாது; துறையுடையானது பாட்டெனவுணர்க."

இவ்வாறு செய்யுளும் உரையும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

களிறொன்று மதம்பட்டுக் கையிகந்து கருவூர் புக்கது. அக்களிற்றின்மீது வருவோனாகிய சோழனை அவ்வூர் வேண்மாடத்துமேலிருந்து முடமோசியார்கண்டு தன்னருகிருந்த இரும்பொறைக்கு அவன் இனையனெனத் தெளிவித்ததாக இச்செய்யுள் இயன்றுள்ளமை அதன் உரை தெரிவிக்கின்றது. ஸ்ரீ. ராகவையங்காரவர்கள் கொண்ட அந்வயமும் பொருளும் நன்கு நோக்கற்பாலன. 'களிற்றுமிசையோனாகிய இவன்யார் என்குவையாயின், நாடுகிழவோன்: இவன்களிறுமதம்பட்டது: இவன் நோயின்றிப் பெயர்க' என வுரைகாரரோடு ஒத்து அந்வயப்படுத்தினார்கள். எனினும் இவர்கள் புள்ளியீடு செய்தது புறநானூற்று அச்சுப்பிரதியோடு சிறிது மாறுபடுகின்றது. ஆனாற் கருத்து வேறுபடுவதாக எண்ணுதற்கிடமில்லை. இவன் யார் என்று சேரன் புலவரை நோக்கி வினவ 'இங்குக் களிறூர்ந்து வருவோன் நீர் நாடு கிழவோனாகிய சோழன்; இவன் பலகையகத்துப் படையெடுத்து வருவானல்லன்; இவன்யானை மதம்பட்டது; அது வாண்மறவரையும் பாகரையும் அறியாது கையிகந்து ஈங்கு வாராநின்றது; இதனால் நீ போர்க்குவருவானாகக் கருதிச் சினவாதருள்க; சோழனும் நோயிலனாகிப் பெயர்க' என முடமோசியார் உண்மை தெளிவித்தாரென்பது அவர்கள் கொண்டபொருள். கருவூர் பகையகமென்பதும், பெருநற்கிள்ளி களிறுஇவர்ந்ததும், அது மைந்துபட்டதும், சோணாட்டெல்லையகத்தே யென்பதும், சோணாடு கருவூருக்கு மிக அணித்தாயுள்ளதென்பதும் அவர்களது கருத்து.

ஆனால் மாணவ நண்பரது முடிபோ ஸ்ரீ. ராகவையங்காரவர்களது முடிபொடு முற்றும் மாறுபடுவதாகும். 'வினைமுடிபு கூறும் உரைப் பகுதியில் அவர் புள்ளியிடமைத்துக் காட்டியிருக்கும் முறையை நோக்கினால் அவர் கொண்டபொருள் தெற்றென விளங்கும். 'களிற்றுமிசையோனாகிய இவன் யாரென்குவையாயின், நாடுகிழவோன்! இவன்களிறு மதம்பட்டது; அதனால் இவன் நோயின்றிப் பெயர்க' எனப்புள்ளி யிடமைத்தனர். சேரன் உடனிருந்த புலவரை நோக்கி, 'களிற்றுமிசை யோனாகிய இவன் யார்? என வினவினனென்றும், புலவர் அவ்வினாவையே அநுகரித்து மொழிந்து 'நாடுகிழவோன்' எனச் சேரனைவிளித்துத் தன்முகமாக்கிப் பின் விடையிறுத்தன ரென்றும், 'இவன்யார்' என்றதன் அறியலுறவு செயலாமென்றும், இவன் என் செயற்பாலன் எனப்பொருள்படு மென்றும், அடற்பாலனல்லன் என்பதுபட நோயிலனாகிப் பெயர்கவென விடை கூறினரென்றும் மாணவர் பொருள்கொள்ளுகின்றார். பகையகமென்றது கருவூரன்றென்பதும் கருவூரினுள்ளே சேரன் தங்கியிருந்த இடமே சோழனது பகையகமெனப்பட்டதென்பதும், சேரனுடன் நட்புக்கோடலை விரும்பி அக்காரியார்த்தமாகவே சோழன் கருவூருக்கு யானைமேற் பிரயாணமானானென்பதும், யானை கருவூர்க்கு வந்ததும் மதம்பட்டுச் சோழனுக்கென அமைக்கப்பட்ட விடுதியிலவனைத் தங்கவிடாது சேரனிருந்த இடத்துக்கு அவனைக்கொண்டு சென்றதென்பதும், அப்போது சேரன் 'இவன் என் செயற்பாலன?' எனவினவவும் 'இவன் நிரபராதி அளிக்கத்தக்கவன்' எனப் புலவர் விடையிறுக்கவும் நேரிட்டதென்பதும் மாணவநண்பரது கருத்து. ஆகவே கருவூர் மேல்கடற்கரைக்கண் சோணாட்டெல்லைக்கு வெகுதூரத்தே இருந்ததெனற்கு இப்பாட்டும் உரையும் ப்ரதிகூலமாக இல்லையென்பது அவரது முடிபாம்.

இருதிறத்தாரும் தம்தம் கருத்துக்கிணங்கவே பழையவுரை வகுக்கப்பட்டுளதெனக் கொள்ளுகின்றார்கள்.

'நாடுகிழவோன்' என்பது 'இவன்யார்' என்ற வினாவிற்கு விடையாயமைந்துள்ளதென ஸ்ரீமத். ராகவையங்காரவர்கள் கொண்டார்கள். மாணவ நண்பரவர்கள் அதனை விளியெனக்கொண்டு, இவன்யாரென்ற தன்பொருளை, நன்றாயுய்த்துணரின் அவ்வினாவிற்கு நாடுகிழவோனென்பது விடையாதல் ஏலாதென நிச்சயித்தார்கள். சேரனைமுன்னிலைப்

படுத்தியே புலவர் விடையிறுப்பதாக நண்பரவர்கள் கருதுதலினாலே, நாடுகிழவோன் என்பது விளியாதல் பெறப்படின் அது சேரனைக்குறித்தல் வேண்டுமென்றும் சோழனை புணர்த்துவதாதல் பெறப்படின் அது விளியெனல் சொல்லாதேயமையு மென்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். நாடுகிழவோனென்பதனை விளியென முடிவுகாணு தற்குரிய காரணங்களைத் தருவதன் மூலமாகவே நண்பரவர்கள் செய்யுட் பொருளை விரித்துரைக்கின்றார்கள். அவர்களது நெறியையே யானும் பின்பற்றிச் சென்று அவர்களால் தரப்பட்ட காரணங்களின் வன்மை மென்மைகளை ஆராய எண்ணுகின்றேன். நண்பரவர்கள் கொடுத்துள்ள நியாயங்களைக் கீழே ஸங்க்ரஹமாகத்தருகின்றேன். முழுவதையும் வாசிக்கும் விருப்பமுடையார் 'செந்தமிழ்' XVI-ம் தொகுதி 2-ம் பகுதி, 5-ம் பகுதி, இவற்றிற்கண்டுகொள்க.

I விழுநீர்வேலிநாடு=மஹோததியைத் தனக்கு அரணாகவுடையநாடு.

மஹோததி=பெருங்கடல், இது சேரருக்குரியது.
சோழருக்குரியது இரத்நாகரம் என்னுங்குடாக்கடல்.
ஆகவே, நாடுகிழவோன்=சேரன்.

II நாடுகிழவோனே:-ஏகாரம்—ஈற்றயலசை. நாடுகிழவோன்—இயற்கை யண்மைவிளி. 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' (தொல்-சொல்-விளி) விளியாதலால் கிழவோன்=சேரன்.

III 'பழனமஞ்ஞைநிழவோனே' (a.) இவ்வரிகளிற் சோழனுக்குரிய சிறப்பியல்களொன்றுங் கூறப்படாமையோடு சேரனுக்கே யுரிய சிறப்பியல்கள் கூறப்படுகின்றன; (i) மலைகளையடுத்துள்ள மருதநிலமுடைய நாடு (ii) மயிலிறகு தொகுக்கும் தொழில் நிகழ்ச்சியுள்ளநாடு. எனவே கிழவோன்=சேரன்.

(b) இவ்வடிகளில் தோன்றுஞ் சுவை மகிழ்ச்சி (இன்பம்); 'நோயிலனாகிப்பெயர்க' என்பதிலுள்ள சுவை அச்சம் (துன்பம்). இங்ஙனம் மாறுபட்ட இருவேறுசுவைகளுக்கு ஏககாலத்தில் ஒரேபொருள் நிமித்தமாக மாட்டாது. ஆகலால் நோயிலனாகிப்பெயர்வோன் கிழவோனன்று. எனவே கிழவோன், சேரனென்பது வெளிப்படை.

(c) இவ்வரிகள் நுதிவாக்கியமாயமைந்துள்ளன. ஆதலாற் பயனளித்தற்குரிய சேரனையே குறித்தல் வேண்டும்.

IV 'இவன் யார்' (a) ஈண்டுள்ள வினாவின்கண்ணே யார் என்பது வினைக்குறிப்பாகிய வினைச்சொல்லாதலால் இத்தொடர் வினைப்பயனிலைகொண்ட தொடராகும். இதற்கு வினையே அறிபடுபொருளது. எனவே இவ்வினா வினைபற்றி வந்ததாகும்; விடையும் வினையாலிறுக்கப்படவேண்டும். கிழவோன் என்ற பெயரால் விடைதரப்பட்டதெனக்கொள்ளின் அது விடைவழுவாம். ஆதலால் நோயின்றிப்பெயர்க என்பதே நேர்விடையாம். வினாவின் பொருள்வருமாறு:—

(1) இவன் செயலென்ன? (பக்-258 வரி 18.)

(2) இவன் செய்தி யென்ன? (பக்-259 வரி 1.)

(3) இத்தன்மையுடையான் செய்தியென்ன? (பக்-261 வரி 14.)

(4) இவன் என்செயத்தக்கவன்? அடற்பாலனா? அல்லனா? (பக்-261 வரி 16.)

விடை-அடற்பாலனல்லன் என்பதுபோதர 'நோயிலனாகிப் பெயர்க' என்பது.

'நாடுகிழவோன்' என்பது விடையாகா தொழியவே, அதனை விளியாகக்கொள்ளுதலல்லதவேறுவழியில்லை. ஆதலின் அது சோனையே குறிக்கின்றது.

V உரையிற்கூட்டிக்காட்டிய வினைமுடிபுவாக்கியங்களை நோக்கினும் 'கிழவோன்' விளியென்பதும் சேரனையே குறித்து நிற்கின்றதென்பதும் தெளியலாகும்.

(a) 'என்குவையாயின்' என்பது வினையெச்சமாதலாற் பெயர்கொண்டு முடியாது. எனவே 'கிழவோன்' கொண்டுமுடியுஞ் சொல்லன்று. அதனால் அது விடையாதலுமில்லை; விளியாகவேகொள்ள நேரிடுகின்றது. ஆதலால் கிழவோனென்றது சேரனையே.

(b) 'கிழவோன்' என்பது முன்னும்பின்னுமியையாது தன்னந்தனியே யொரு தனிமொழியா யிருப்பதால் விளிப்பெயராகவே கொள்ளுதல் வேண்டும்.

(c) 'களிற்றுமிசையோனாகிய இவன் யார்' என்பது என்குவையாயினென்ற அநுகாரக் குறிப்பிற்குரிய புனராவாதமாம். இதன் பொருள் (முன்பு என்னோடு போரெதிர்ந்து) களிற்று மிசையோனாய் வந்த இவன் யார் என்பது. இப்பொருள் வருபவன் சோழனெனச் சேரனறிந்திருந்தமையை விளக்குகின்றது. ஆதலால், வருபவன் இன்னானெனப் பொருள்படும்படியாய்க் கிழவோன் என்பதனை விடையாயமைத்தலால் நின்று பயனின்மையெனுங்குற்றமுளதாகும். ஆகவே சோழனது செயல்பற்றியே வினா நிகழ்ந்ததாதல் வேண்டுமாகலின் 'கிழவோன்' விடையாயமையாது விளிப்பெயராகவே நின்றதெனல் வேண்டும். 'களிற்றுமிசையோனாகிய இவன் யார்?' என இரண்டு வாக்கியத்தை யொன்றுபடக் கூட்டியுரைத்தமையால் உரைகாரர் கருதியபொருள் இதுவே யென்பது வன்மையுறுகின்றது.

(d) இவன் நாடுகிழவோன் என்று உரையில் இல்லை.

(e) யார் என்ற வினாவிற்கு 'நாடுகிழவோன்' என்பது விடையாயின் அதுகொண்டே முற்றிவிடு மாதலால் 'களிறுமதம்பட்டது' முதலியன வேண்டா கூறலாம். எனவே 'நாடுகிழவோன்' விடையன்று; விளியாம்.

(f) நாடுகிழவோனென்று இடையிட்டு உரையிற் காணப்படுவது இப்பொருட்கு அநுசரணையாயிருக்கின்றது.

VI செய்யுளுரையிரண்டினும் அமைந்து கிடக்கும் சரித்திரம்.

நண்பரவர்களது ஆராய்ச்சிசென்றமுறையினை யொருவாறு இங்கே காட்டினேன். இனி அவர்களால் தரப்பட்ட நியாயங்களை முறைப்பட விசாரணை செய்தல் வேண்டும்.

## I. விழுநீர்வேலிநாடு.

இத்தொடர் 'கிழவோன்' என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழியாகும். இவ் அடைமொழி சேரனொருவனுக்கே பொருந்துமென்பது நண்பரவர்களது துணிபு. 'விழுநீர்' என்பதற்கு உரைகாரர் 'மிக்கநீர்' என்று பொருளெழுதினர்; மிக்க என்பது மஹத் சப்தபரியாயமாகவும் நீர் என்பது உதகசப்தபரியாயமாகவும் உள்ளன; உதகசப்தமும் உதசப்தமும் ஒரே பொருளுடையன; ஆகவே 'மிக்கநீர்' என்ற தொடர்மொழி 'மஹோதகம்' என்னும் பெருங்கடலைக் குறிப்பதாகும்; எனவே விழுநீர்வேலிநாடு' என்பதற்கு 'மஹோதகம்' என்னும் பெருங்கடலே வேலியாகவுடையநாடு என்று பொருள்கொள்ளவேண்டும்; சோழநாட்டுக்குரியது 'இரத்நாகரம்' என்னுங் குடாக்கடலேயாம், மஹோததியன்று; சேரநாட்டுக்குரியது மஹோததியாகிய பெருங்கடலேயாம்; ஆகையால் விழுநீர்வேலிநாடு சேரநாடேயாமென்று இங்ஙனமவர்கள் கூறுகின்றார்கள்.

2. சேரநாட்டுக்குரிய கடல் 'மஹோததி' யென்றும் சோழநாட்டுக்குரிய கடல் 'இரத்நாகர' மென்றும் கூறப்பட்டிருக்கின்றன. சேரருக்குரியது இந்தியாவிற்கு மேற்கேயுள்ள கடல்; அஃதாவது பெருங்கடல். சோழருக்குரியது இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள கடல்; அஃதாவது குடாக்கடல். எனவே பெருங்கடல் 'மஹோததி' யென்றும் குடாக்கடல் 'இரத்நாகரம்' என்றும் வழங்குவதாக நண்பரவர்கள் எண்ணுகின்றார்கள். இவ்வாறுகொள்ளுதற்குத் தாம் கடைப்பிடித்த ஆதாரம் இன்னதென்று அவர்கள் எழுதினார்களில்லை. ஆதாரங் கூறாத முறையில் இக்கொள்கையைப்பற்றி ஊன்றியாராயவேண்டிய ஆவசியகமில்லை. எனினும் உண்மை தெளியவேண்டுமென்னும் அவாவுடையேனாதலின், வடமொழி நூல் வழக்கும் ஐதிகமும் இதனை யாதரிக்கின்றனவா என்று விசாரித்துணர விரும்புகின்றேன்.

3. வடமொழிப்பதங்களின்பொருளையெல்லாம் நன்கெடுத்து விளக்கிக்காட்டும் வடமொழி நிகண்டுகள் பலவற்றுள்ளும் மிகச்சிறந்தது அமரகோசமாம். இதற்கு உரையெழுதிய பலருள்ளும் காலத்தானும் சிறப்பானும் முற்பட்டவர் க்ஷீரஸ்வாமி யென்பவர். இவர் 11-வது நூற்றாண்டில் திகழ்ந்தவர். அமரகோசத்தைப் பூர்த்திசெய்ய

வேண்டுமென்ற நோக்கத்துடனேயே உரைவகுத்தவராவர். இவரது உரையினும் அமரகோச மூலத்திலும் நண்பரவர்கள் கூறுவன ஒன்றுங் காணப்படவே இல்லை. 'ரத்நாகரம்' என்பது பொதுப்படக் கடலுக்கு ஒரு பெயராகக் கொடுக்கப்பட்டுளதேயன்றிச் சோழருக்குரிய குடாக் கடற் பெயராக உரைக்கப்பட்டிலது. இக்காலத்திய விக்காபட்டீயத்திலும், ஆப்டே, வைத்யர், வில்ஸன் முதலானோரெழுதிய அகராதிகளிலும் 'ரத்நாகரம்' குடாக்கடற் பெயரென்றும் 'மஹோததி' சோருக்குரிய பெருங்கடற் பெயரென்றும் விளக்கப்பட்டிலவாம். எனவே வடமொழி நிகண்டினும் அகராதிகளினும் நண்பரவர்களது கூற்றிற்கு ஆதாரம் சிறிது மின்மை தெளியப்பட்டது.

4. இனி வடமொழிநூல்களுட்பயின்றுள்ள பிரயோகங்களை யொரு சிறிது நோக்குதல்வேண்டும். ரகுவம்சம், 3-ம் ஸர்க்கம் 17-ம் ஸ்லோகத்தில் 'மஹோததி' யென்றபதம் வந்துளது. திலீபன் தனது அரும்பெறற்புதல்வனான ரகுவினது விரும்பெழின்முகத்தைத் தனது பத்மதுல்லியமான நேத்திரங்களாற் பருகி உள்ளத்தே கரைபுரண்டெழுந்த உவகைப் பெருக்கினைத் தன்னுள்ளடக்கவகையறியாது நின்ற நிலைமையினைக் காளிதாஸர் ஒருவமானமுகத்தால் விளக்குகின்றார். அம்புலிகண்ட பைங்கடல் தன் கொந்தளிப்பை அடக்கலாற்றாதது போல் என்பது உவமானம். 'மஹோததே: பூர இவேந்து தர்ஸநாத்' என்பது மூலம். இங்கே 'மஹோததி' யென்பதற்குப் பொதுப்படப் பெருங்கடல் என்பதுதான் பொருளேயன்றிச் சோருக்குரிய குடபெருங்கடல் என்பது பொருளன்று. உரையாளர் மல்லிநாதரும் குடபெருங்கடற் பெயரென்று எழுதினாரல்லர்.

5. இக்காவியத்தின்கண்ணேயே 4-ம் ஸர்க்கத்தில் 34-ம் ஸ்லோகத்தினும் 50-வது ஸ்லோகத்தினும், 6-ம் ஸர்க்கத்தில் 54-வது ஸ்லோகத்தினும் 'மஹோததி' யென்றபதம் பயின்றுள்ளது. இம்மூன்று இடங்களிலுள்ள பிரயோகங்களும் நண்பரவர்களுடைய கருத்துக்கு எத்துணை தூரம் ஒத்துளவென்று பார்க்கவேண்டும். 4-ம் ஸர்க்கம் ரகுவீரனது திக்குவிஜயத்தினைக் கூறுகின்றது. 'தனது மஹத்தானஸேநாஸமூகங்களை நடாத்திக்கொண்டு கீழ்சமுத்திரத்தைநோக்கிச்சென்ற (பூர்வஸாகரகாமிநீம்) ரகுவீரன் சிவபெருமானது ஜடாபாரத்தினின்றும் வீழ்ந்த கங்கையைக்கொண்டு சென்ற பகீரதனை யொத்து விளங்கி

ளுன் (ஸ்லோ-32)......இவ்வாறு கீழ்த்திசையிலுள்ள தேசங்களை யெல்லாம் கடந்து சென்று ஜயசீலனுன ரகுவீரன் தாலீவனத்தாற் பசுமை பூத்து விளங்கிய மஹோததியின் கரையை யடைந்தான் (ப்ராப தாலீவன ஸ்ரீயாமமுபகண்டம் மஹோததே:)' என்று காளிதாஸர் நயம்படவுரைக்கின்றனர். இதனையடுத்து ஸுஹ்மர்களையும் வங்க அரசர்களையும் வென்று அடிப்படுத்தமை கூறப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் மஹோததி யென்றது நண்பரவர்களுடைய சேரர்பெருங்கடலைக்குறியாது வங்கதேசத்துக்கருகிலுள்ள குடாக்கடலினையே குறிக்கின்றமை தெளிவாம். பின்னர் ரகுவீரன் கலிங்கதேசத்தரசனைவென்று அவனது நிதிமுழுவதும் கைப்பற்றிக் கீழ்சமுத்திரக்கரையோரமாக நெடுகவந்து காவேரிநதியைக்கடந்து தெற்கேயுள்ள பாண்டியதேசத்தை அடைந்தான். பாண்டிய அரசர்களும் ரகுவீரனது ஆற்றலுக்குடைந்தார்கள். மஹோததியில், தாம்ரபர்ணிசங்கமமாகுமிடத்தில், உற்பத்தியாகின்ற மதித்தற்கரிய முத்துக்களைத் (தாம்ரபர்ணீஸமேதஸ்யமுக்தாஸாரம் மஹோததே:) திலீப நந்தனனுக்கு அடியுறையாக வைத்து அவ் அரசரனைவரும் பணிந்திறைஞ்சினர்கள்; இது தாம் நெடுங்காலமாக ஈட்டிவைத்த புகழனைத்தையும் ஒருங்குதொகுத்து ரகுவீரனிடம் சமர்ப்பித்தது போலிருந்தது (ஸ்லோ-50). இவ்விடத்திலும் தாம்ரபர்ணி சங்கமமாகுங் குடாக்கடலே 'மஹோததி' யென்று கூறப்பட்டிருக்கின்றது.

6. ரகுவம்சத்தின் 6-வது ஸர்க்கம் இந்துமதியின் ஸ்வயம்வரவர்ணனை கூறுகின்றது. அம்மாதர்திலகத்தைச் சுநந்தையென்பவள் மன்னர்குலதீபங்கள் விளங்குகின்ற மகாமண்டபத்தே இட்டுக்கொண்டு சென்று, ஆண்டு சித்திரப்பதுமைகள் போன்று ஆடாது அசையாது வீற்றிருந்த அரசர்களது குலவரலவை அணிபெற எடுத்துரைக்கின்றாள். அங்ஙனங் கூறும்பொழுது, கலிங்கதேசத்தரசன் "பதிர் மஹேந்த்ரஸ்ய மஹோததேஸ்ச" என்று வருணிக்கப்படுகிறான் (ஸ்லோ 54.) மஹேந்திரத்துக்கும் மஹோததிக்குந் தலைவன் என்பதுவே இதன்பொருள். மஹேந்த்ரம் பர்வதத்தையும் மஹோததி கடலையுங்குறிப்பனவாம். ஈண்டும் கலிங்கதேசத்தையடுத்துள்ள குடாக்கடலே 'மஹோததி' யென்றழைக்கப்பட்டமை காணலாம்.

7. இங்கே காட்டிய மூன்று பிரயோகங்களும் குடாக்கடலானது அதன் வடபெரும் பாகத்தினும் மத்தியபாகத்தினும் தென்பாகத்தினும் 'மஹோததி' யென்று வழங்கப்பட்டமைக்குச் சிறந்த ஆதாரங்களாயின. ஆகவே இவைகள் நண்பரவர்களது கொள்கைக்கு ஆதாரமாகாமையோடு அதற்கு முற்றிலும் விரோதமாக இருக்கின்றன.

8. ரகுவம்சமேற்கோள்களேயன்றிப் பிறநூன் மேற்கோள்களும் எனது கருத்தை யாதரிப்பனவாகக் காட்டுதல் கூடும். ஒன்று மட்டுங்கூறியமைகின்றேன். தைத்திரீயர்களின் மாத்யாஹ்நிக உபஸ்தான மந்திரத்திலும், தைத்திரீய ஆரண்யகத்திலும் குணபாலுள்ள கடலே மஹார்ணவம் (அஃதாவது மஹோததி) என்று கூறப்படுகிறது. 'ய உதகாந் மஹதோர்ணவாத் விப்ராஜமாந:' என்பது மூலம் (தைத்தி-ஆரண்-VII-42). எவன் (சூரியன்) ஒளிபொருந்தியவனாக மஹார்ணவத்திலிருந்து மேலெழுந்தானோ என்பது இதன்பொருள். எனவே சூரியனுதயமாகும் கீழ்த்திசைக்கடல் அஃதாவது குடாக்கடல் மஹார்ணவம் என்று கூறப்பட்டுள்ளமை நன்கு அறியலாகும்.

9. இனி, கர்ணபரம்பரையாக வழங்கிவரும் ஐதிகந்தானும் யாது கூறுகிறதென்று அறிதல்வேண்டும். நண்பரவர்கள் சேரநாட்டுக்குரிய கடல் மஹோததி யென்றும் சோழநாட்டுக்குரிய கடல் இரத்நாகரமென்றும் எழுதியுள்ளார்கள். ஆனால், ஐதிகமோவெனின் நண்பரவர்களது கருத்துக்கு முற்றுமாறாகச் சோழநாட்டுக்குரிய கடல் மஹோததியென்றும் சேரநாட்டுக்குரிய கடல் இரத்நாகரம் என்றுந் தெரிவிக்கின்றது. இவ் ஐதிகத்திற்கு மூலாதாரம் இதுவென என்னால் இப்பொழுது நிச்சயித்தல் கூடவில்லை. எனினும் இங்ஙனம் ஐதிகமொன்றுண்மைக்குக் காலத்தானும் இடத்தானும் சம்பந்தமில்லாத பல்வேறு கல்வியாளர்கள் சான்று பகர்கின்றார்கள். ரகுவம்சப் பதிப்பாசிரியரான நந்தர்கிகர் என்பவர் அப்பதிப்பிற்குத் தாமெழுதிச்சேர்த்த ஆங்கிலக் குறிப்பில் (பக்-122) 'மஹோததி-சோழமண்டலத்திற்குரிய கடல்' ('Sea of the coramandal coast') என்று கூறியிருக்கின்றார். இதுவுமன்றி இப்பதத்தை ரகுவம்சகாவ்யத்திற் பயின்றுள்ள சிறப்புப் பெயர்களிலொன்றாக (Proper names) அவர் சேர்த்திருக்கின்றார். ஸ்ரீவெங்கடேசஐயரவர்கள், M. A. தாமெழுதிய 'சங்கராசார்யரும் அவரது காமகோடி பீடமும் (Sankaracharya and his Kamakoti Peeta

pp, 11, 18, 19) என்ற நூலில் 'ரத்நாகரம்' என்பது மேல்பாலுள்ள கடலினது பெயரென்றும், 'மஹோததி' யென்பது கீழ்பாலுள்ள கடலினது பெயரென்றும், இக்கீழ்த்திசைக் கடற்கரையிலிருக்கும் ஜகந்நாதபுரியில் மஹோததியெனப்பெயரிய தீர்த்தமுளதென்றும் சொல்லுகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் சேரர்பெருங்கடல் 'மஹோததி' யென்றழைக்கப்படுவதற்குச் சான்றாக அக்கடற்கரையிலுள்ளதொரு பட்டினம் 'மஹோதை' யென வழங்கப்படுகிறதென்று மாணவ நண்பரவர்கள் காட்டினமை ஞாபகம் வருகின்றது. முதலாவதாக 'மஹோததி' 'மஹோதை' இவ்விரண்டினுக்கும் யாதோரியையுங் காணப்படவில்லை. வலிந்து இடர்ப்பட்டு ஏதேனுமோரியைபுகாட்டுதல் கூடுமாயினும், தீர்த்தத்தின் பெயராகிய மஹோததிக்கும் கடலின் பெயராகிய மஹோததிக்கும் உள்ள வியைபுபோற் சேட்டமாத்திரையிலுண்மையெனத் தெளிவித்தற்குரிய சக்தி அதற்கில்லை. இரண்டாவதாக, மஹோதை யென்ற பெயரின் வரலாறும் காரணமும் தக்க ஆதாரங்களுடன் நண்பரவர்களாற் காட்டப்படவில்லை. ஆகவே அவர்கள் சான்று எனத்தந்தது சிறிதும் வலியிலதாயொழிகின்றது. மேற்குறித்த ஐதிக சம்பந்தமாகப் பிறிதோர் ஆராய்ச்சியாளர் கூறியிருப்பனவற்றை மட்டும் எடுத்துச்சொல்லி நிறுத்துகின்றேன். ஸ்ரீமாந் கே. என், சீதாராம் M. A. (Hons) M. R. A. S. etc. தமது இந்திய சரித்திரப் பயிற்சி' யென்ற வியாசத்தில் 'ரத்நாகரம் (அரபிக்கடல்) மஹோததி (வங்காளக்குடாக்கடல்) என்ற இரு கடல்களாலும் சூழப்பெற்ற பாரதவர்ஷம்' என்றெழுதிச் செல்கின்றனர் (New India, Weekly Supplement, April 12, 1919). இங்ஙனமாகப் பலதிறத்தினரும் எடுத்துச்சொல்லுதலினாலே ஐதிகமொன்றுளதெனக்கோடல் சரியாயின், அவ் ஐதிகங்கூறுவதின்னதென்பதைப்பற்றிச் சிறிதும் சந்தேகமே இல்லை. ரகுவம்சமேற்கோள்கள் முதலியவற்றால் குடாக்கடல் 'மஹோததி' யென்று குறிக்கப்பட்டமை காட்டப்பட்டது. வழங்கிவரும் ஐதிகமோ அக்குடாக்கடலொன்றே மஹோததி யென்று அழைத்தற்குரியதென்பதை வெளிப்படுக்கின்றது. ஆதலால் 13-ம் புறப்பாட்டின் கடையடியில் 'விழுநீர்' எனப் பயின்றுவந்தது 'மஹோததி' யென்ற வடமொழிப்பெயரைச் சுட்டுதற்கென நண்பரவர்கள் கொண்டதனோடு உடன்படுவதாயின், விழுநீர்வேலிநாடு சோழநாடென முடிவு காணவேண்டுமேயன்றி அது சேரநாடெனல் எவ்வாற்றானும் பொருந்துவதன்றாம்.

10. இனி, 'விழுநீர்' என்ற தொடர்மொழி மஹோததி யென்ற வடமொழிப் பெயரைக் குறிக்கவல்லதா என்றாராய்தல்வேண்டும். இது தனித்துவரும்பொழுது 'சீரியநீர்,' 'சிறந்தநீர்' எனப்பொருள்படுமேயன்றிப் பிறவாறு பொருள்படுதலில்லை. 'விழுமம் சீர்மையுஞ் சிறப்புமிடும்பையும்' என்பது தொல்காப்பியம் (உரிச்-55). விழு என்ற வுரிச்சொல் நீர் என்றதனை விசேடித்து நின்று சாதாரணமாகக்கருதப்படும் நீரை யொழித்து அதனினும் சிறந்ததொரு நீரைக் குறித்தற் பயத்ததாய் வந்தது. இடம்நோக்கியே சிறந்ததிதுவென அறியப்படுதலின், விழுநீர் என்ற தொடர்மொழி பலவேறு தன்மையுள்ள நீரினைக்குறித்து வருவது காணலாம். சிலப்பதிகாரத்தின்கண் (V-168) 'மஞ்சனநீர்' என்ற பொருள் குறித்துவந்தது. ஆராய்ச்சிக் கெடுத்துக் கொண்ட செய்யுளின்கண், வேலியின்னதென விளக்குதற்பொருட்டு அதனையடுத்துவந்தமையானே கடல்நீர்என்ற பொருள் குறித்துவந்தது. ஆகவே இத்தொடர்மொழி இடவிசேஷத்தினாற் கடல்நீரைக் குறித்ததேயன்றி இதற்குரிய பொருள் சீரிய அல்லது சிறந்த நீர் என்பதேயாம். உரை காரரும் 'மிக்கநீர்' என்றே கூறினர். செய்யுளின்கண்ணுள்ள சொற்களுள் ஒன்றனையும் விடாது பொருளுரைத்துச் செல்லுமியல்பினராகிய இவர் கடலென உரையில் எழுதாமையானே அக்கடலைக் குறிப்பானன்றி நேரேயுணர்த்துஞ்சொல் யாதொன்றும் செய்யுளிலுளதாகக் கருதினாரல்ல ரென்பது பெறப்படும். 'மஹோததி' என்ற ஸம்ஸ்க்ருத பதமோ, மஹா+உததி எனப்பிரிந்து பெருங்கடல் எனப் பொருள்படும். சீரிய அல்லது சிறந்த நீர் பெருங்கடலெனப் பொருள்படுதல் யாண்டும் இல்லை. ஆகையால் விழுநீர் என்பதற்கு மஹோததியென்றதன்பொருளைத்தானும் உணர்த்து மாற்றலில்லை யென்பது தெளிவாம்.

11. இங்ஙனமாகவும், 'மிக்கநீர்' என வுரையிற் காணப்படுவதனை அடிப்படையாகக்கொண்டு 'மஹோததி' யென்பதே கருதப்பட்டதெனக் காட்டுதற்கு முயன்றுள்ளார்கள். 'மிக்கநீர்' என்பதனை 'மஹோதகம்' என்பதன் பரியாயமாகக் கொள்ளுதலுங் கூடும். மஹோதகம் என்பது மஹோதம் எனவருதற்கு நூல்வழக்குக் காட்டப்படவில்லை யெனினும் அதனையும் ஆக்ஷேபித்தல் வேண்டா. ஆனால் இதனையடுத்து 'மிக்கநீர் என்ற தொடர்மொழிக்கு மஹோதம் என்னும் பெருங்கடலே

பொருளாமெனவறிக' என்றெழுதியுள்ளார்கள். 'மஹோதம் என்னும் பெருங்கடல்' என்பதற்கு மஹோதம் அஃதாவது பெருங்கடலென்றே னும் அல்லது மஹோதம் என்ற சிறப்புப்பெயருடைய பெருங்கடலென் றேனும் பொருள் கொள்ளுதலமையும். மஹோதம் என்பது பெருங் கடல் என்ற பொருளில் வடமொழி நூல்களில் யாண்டேனும் வந்திருப் பதுண்டா? வந்திருப்பதுண்டாயின், நண்பரவர்கள் எடுத்துக்காட்டி யுண்மை தெளிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும் 'மிக்கநீர்' என்பதன்றோ வடமொழியில் மஹோதம் எனக்கொள்ளப்பட்டது? இவ் வடமொழித்தொடரினை மீண்டுந் தமிழ்ப்படுத்தும்பொழுது 'பெருங் கடல்' என்ன வருமென்றல் சிறிதேனும் அங்கீகரிக்கத் தகுந்ததாமா? மஹோதம் என்பது பெருங்கடல் எனப் பொருள்கொள்ளவில்லை; மஹோதம் என்னுஞ் சிறப்புப்பெயரையுடைய பெருங்கடல் என்பதே தம்கருத்தென அவர்கள் கூறுவார்களாயின், அது சிறப்புப்பெயரென் பது நூல்வழக்கினும் உலகவழக்கினும் காணப்படவில்லையே. 'சேர நாட்டுக்குரியகடல் மஹோததியாகிய பெருங்கடலேயாம்' என்று அவர் கள் தாமே எழுதிச்செல்வதால் மஹோததி யென்பதே சிறப்புப்பெய ரெனல் அவர்களும் நன்கறிந்துவைத்ததொன்றுமென்பது பெறப் படும். ஆகவே 'மஹோதம் என்னும் பெருங்கடலே பொருளாமென வறிக' என்று அவர்கள் எழுதியது எவ்வகையால் நோக்கினும் பொ ருந்துமாறில்லை. மஹோதம் பெருங்கடல் எனப்பொருள்படுதல் இல்லை யாகவே, அது மஹோததியாதலுமில்லை. ஆதலால் 'மிக்கநீர்' என்ற தமிழ்த்தொடரும் 'மஹோததி' யென்றதனை யுணர்த்தும் ஆற்றல் உடையதன்றாம். நியாயங்கூறும் அளவும் மஹோதம் என்றதனைப் பற்றியே பிரஸ்தாபஞ்செய்து முடிபுகூறுமிடத்தில் மஹோததியென்ற தொடர்மொழியினைப் பூர்வசம்பந்தம் யாதொன்றுங்காட்டாது மெல் லெனச் செருகிவிடுதல் நண்பரவர்களது நடுவுநிலைமைக்குத் தக்க தன்றாம்.

12. 'மிழுநீர்' என்பது 'மஹோததி' யென்றபெயரின் மொழி பெயர்ப்பு அன்றெனற்கு வேறொரு அதிமுக்கியமான காரணம் இருக் கிறது. மஹோததி யென்ற தொடர்மொழி குறிப்பிட்டவொருகட லுக்குமட்டும் வழங்கும் சிறப்புப் பெயரென்பதனைப் பூர்விக தமிழ்ச் சான்றோர்கள் அறிந்தவர்களாயினன்றே அதனை மொழிபெயர்த்துத்

தங்கள் செய்யுட்களில் அமைத்துக்கொண்டார்களெனக் கூறுதல் கூடும். இவ்வடமொழித் தொடரின் பரியாயமாகப் பண்டைத் தமிழ்நூல்களிற் காணப்படுவனவற்றுள் பெரும்பாலன பொதுப்படக் கடலினையும், ஒரு சில சோழருக்குரிய கடலினையும் வேறுசில சேரருக்குரிய கடலினையும் உணர்த்துவனவா யிருக்கின்றன உதாரணமாகச் சில தருகின்றேன்:—

## A. பொது.

(1) 'பெருங்கடல்'-புறம்-198; 204; 397.

அகம்-மணிமிடைபவளம் (புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைபோழ)

பதிற்றுப்பத்து-76.

ஐங்குறுநூறு-102; 123; 161-170.

நற்றிணை-45; 74; 106; 117; 155; 163; 231; 245; 375; 392;

குறுந்தொகை-101; 243; 246; 269; 311; 313; 320;

மணிமேகலை-2-73; 12-67; 14-70; 16-19;

நாலடி-275; 332.

(2) 'மாக்கடல்'-புறம்-42.

பதிற்றுப்-11; 17.

(3) 'நளிகடல்'-புறம்-26.

நாலடி-166; 242.

மணி-6-78.

(4) 'இருங்கடல்'-புறம்-201; 363.

(5) 'நெடுங்கடல்'-குறள்-17.

(6) 'இருமுந்நீர்'-புறம்-20.

(7) 'நளியிருமுந்நீர்'-புறம்-35; 66.

மணி-12-92; 16-13.

(8) 'வீங்குநீர்'-சிலப்பதி-6-148.

மணி-5-31.

(9) 'வீங்குநீர்வேலி'-சிலப்பதி [மங்கலவாழ்த்து. வீங்கு=மிக்க (அடியார்க்கு நல்லார். cf விழு)].

## B. சோழர்க்குரிய குணகடல்.

(1) 'வீங்கோதம்' சிலப்பதி 7-28 (புகாரையடுத்துள்ளதாகக் கூறப்பட்டுளது.)

(2) 'நீலமாக்கடல்'-மணி-8-17. (காலை ஞாயிறு தோன்றுவதாகக் கூறப்பட்டுளது.)

(3) 'நெடுங்கடல்'-நாவுக்கரசு-ஒற்றியூர்த் திருத்தாண்டகம்-4.

## C. சேரருக்குரிய குடகடல்.

(1) 'நளிநீர்ச்சேர்ப்ப'-ஐங்குறுநூறு-179.

(2) 'பெரியநீர்வேலிசூழ்ந்து, வாசமே கமழுஞ்சோலை வயலணியனந்தபுரம்' நம்மாழ்வார் 10-ப, 2-தி, கெடுமிடர் 4.

13. இங்ஙனமாக வுள்ளன தமிழ்நூற் பிரயோகங்கள். மஹோததி சிறப்புப்பெயரென்பது கடைச்சங்ககாலத்திற் பிரசித்தமாயிருந்ததாயின், அக்காலத்து ஆன்றோர்கள் அதன் மொழிபெயர்ப்பினையும் சிறப்புப்பெயராகவேகொண்டு குறிப்பிட்ட வொருகடலுக்கே பிரயோகித்திருப்பார்கள்; பொதுவொடு சிறப்பினை மயங்கவையாது பொதுவினை வேறுவகையாகத் தெரிப்பார்கள்; பிறிதொரு சிறப்புப்பெயருள்ள கடலுக்கு இச்சிறப்புப்பெயரினை வழங்கார்கள். இந்நியமங்களுக்கு முற்றிலுமாறுகப் பிரயோகங்கள் காணப்படுகின்றன. மஹோததி இரத்நாகரம் என்ற வழக்குவேறுபாட்டினை உணர்ந்திருந்தார்களாயின் 'ரத்நாகரம்' என்ற பெயரினை யெவ்வாறு மொழிபெயர்த்துள்ளார்கள்? பிரயோகம் யாண்டுளது? குறிப்பிட்ட வொருகடலுக்கே தனித்துரியதாய் வழங்கப்பட்டுளதா? அரிதிற் பொருளுணரத்தகுவனவாயிருக்கும் பண்டைத் தமிழ்நூல்கட்குச் சிறப்புமிக்க பேருரைகள் வகுத்த வரம்பில்கேள்விமேதக்கோரால் மஹோததி, இரத்நாகரம் என்பனவற்றிற்குரியவாய்ச் சொல்லப்படுகின்ற வழக்குவேறுபாடு ஓரிடத்தேனும் காட்டப்படவில்லையே! இவ்விஷயங்களை யெல்லாம் உற்றுராயின், மஹோததி சிறப்புப்பெயராமென்பதனைப் பண்டைத்தமிழா

சிரியர்கள் அறிந்துள்ளார்களெனற்கு ஆதாரம் ஒரு சிறிதுமின்மை தெளிவாம். ஆதலால் அவ்வடமொழித்தொடர் மொழிபெயர்த்து அமைக்கப்பட்டதெனல் சிறிதும் அங்கீகரிக்கத்தக்கதன்றாம்.

14. இத்துணையுங் கூறியவற்றான், 'விழுநீர் வேலிநாடு' சேரநாடேயாமென்ற முடிபு எள்ளளவும் பொருந்தாதென்பது நன்குதேறப்படும். 'மஹோததி' சோழருக்குரிய குடாக்கடலை யுணர்த்துதற்கு வருதல் வடமொழிநூல் வழக்கில் உண்டென்பது காட்டப்பட்டது. ஐதிகத்தை நிச்சயித்தல் கூடுமாயின், அது சோழருக்குரிய குடாக்கடலொன்றே மஹோததியெனற்குரியதென்பதைக் காட்டுகின்றது. ஆகவே, விழுநீர் என்பது மஹோததியின் பரியாயமென்று நண்பரவர்கள் கூறுவதனோடு உடன்படுவதாயின், விழுநீர்வேலிநாடு சோழநாடேயென்பது தெளியப்படும். குடாக்கடல் என்ற பெயருடையதனைப் பெருங்கடல் எனக் கூறுதல் தகாதுஎன்று மாணவ நண்பரவர்கள் கருதுவதுபோலத் தோன்றுகிறது. 'குடாக்கடல்' என்பது தற்கால ஆங்கிலவழக்கு. இவ்வழக்கிற்கியையப் பூர்வகாலத்தினும் பெயரிட்டு வழங்கினரென்பது சிறிதும் ஒப்பத்தகுந்ததன்று, மேற்காட்டியபடி மஹோததியென்ற பெயர்வழக்கினை உண்மைக்கு மாறுபடக்கொண்டார்களென்பது மட்டுமன்று; அதனைக் காரணங்காட்டி முடிவுகாணுதலே பிழையாமென்பது எனதுகருத்து. ஏனெனின், 'விழுநீர்' மஹோததியென்றதன் மொழிபெயர்ப்பே அன்றாம். ஆகவே 'விழுநீர் வேலிநாடு' என்ற தொடர்விஷயமாய் அவர்கள்கொண்ட முடிபு முற்றும் பிழைபாடுடையதாகின்றது. இத்தொடரைமட்டுங்கொண்டு நாடுகிழவோன் சோழனோ அல்லது சேரனோ வென்பது நிச்சயித்தல் கூடாதாகும்.

15. இம்முடிபில் யானும் நண்பரவர்களும் வேறுபடினும் அவர்கள்கூறுவனவொருசில எனக்கும் அங்கீகாரமேயாம். நீர்நாடு என்பதும் நீர்வேலிநாடு என்பதும் பொருளிற் பெரிதும் வேறுபாடுடையனவாதல் அவர்களால் நன்கு காட்டப்பட்டுள்ளது. ஆதலால் இதனை மறந்து அல்லது புறக்கணித்து 'நீர்நாடு கிழவோன்' என்று நெகிழ்ந்து செல்லுதல் கூடாதாம். நீர்நாடு என்பதும் புனல்நாடு என்பதும் ஒருபொருளனவாதலானும் சோணாடு புனல்நாடென வழக்கப்படுதலானும் நீர்நாடுகிழவோன் சோழனவன் என முடிவுகாணுதற்பொருட்டு

'வேலி' என்பது ஒழிக்கப்பட்டதாயின் அது பெரிதும் ஆக்ஷேபத்திற் கிடமானதாகும். ஸ்ரீ. ராகவையங்காரவர்கள் இக்கருத்துடன் அப் பதத்தை விட்டிருப்பார்களென்று சொல்ல யான்துணியவில்லை. எங் ஙனமாயினும் சோழநாடும் கடலினையடுத்துளதாதலின் அதனை நீர்வேலி நாடு என்று சொல்லுதற்கண் யாதோரிழுக்குமின்றாம்.

(தொடரும்.)

S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,

திருவனந்தபுரம்.

குறிப்பு:—எனது நண்பர்களான ஸ்ரீ K. G. சங்கரஐயரவர்களும் ஸ்ரீமாந் S. தேசிகவிநாயகம்பிள்ளையவர்களும் இவ் ஆராய்ச்சியுரை யெழுதிமுடித்தற்கண் மிக்க உதவிபுரிந்துள்ளார்கள். அவ்விருவர்க்கும் யான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

---

ஸ்ரீ.

# முன்னைதன்மறுதலைமுடிவு.

திருவனந்தபுரம் நண்பர் ஸ்ரீமத் வையாபுரிப்பிள்ளையவர்கள் (பீஏ, பீ. எல்.) எழுதிய "13-வது புறப்பாட்டும் உரையும் I" என்ற ஆராய்ச்சி இதன் முன்பு வைக்கப்பட்டுள்ளது. அதில், அவ்வாராய்ச்சியெழு தற்குக் காரணமான பூருவ விருத்தாந்தத்தை நன்குகாட்டியுள்ளார்கள். அதில், எனக்கும் ஒரு சிறிதியைபுடைமையால் அவ்வாராய்ச்சியில் நுழைந்து எனது கருத்தையும் வெளியிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்வாராய்ச்சியில் நண்பரவர்கள், மாணவர் எழுதியவிடயங்களை யெல்லாம் நுணுகியறிந்து செவ்வனே சொல்லியிருப்பினும் முக்கிய மான ஒரு விடயத்தைத் தவறுபடக்கருதிவிட்டார்கள். அதாவது சோர்பெருங்கடலொன்றே மகோததியாவதன்றி உலகத்திலுள்ள பிறி தொரு பெருங்கடலும் மகோததியாகாதெனை மாணவர் கருதியதாகக் கொள்ளுதலே. இதுவே இவ்வொருதலையாராய்ச்சியெழுதுவதற் கடிப்

படையாயிற்று. சொல்வோன்கருத்தொடுபடாதபொருளைக்கற்பித்துக்கொண்டு அதனையாக்ஷேபிப்பது சிறிதும் பயனற்றதாமாதலால், முதலில் மாணவர்கருத்தின்னதெனை அறியுமாறு கீழே விவரித்துக் காட்டுகின்றேன்.

உததி—கடல்; இது கடற் பொதுப்பெயர்; குடாக்கடல், பெருங்கடல் எல்லாவற்றையும் ஒருங்கேயும், ஒவ்வொன்றையும் தனியேயும் உணர்த்தும் முக்கிய விருத்தியுடையது.

மகோததி (மஹத்+உததி)—பெருங்கடல். இஃதடைமொழியாற்றலால் கடற் சிறப்புப்பெயராய்க் குடாக்கடலையொழிந்த பெருங்கடலையெல்லாம் ஒருங்கேயும் தனியேயு முணர்த்தும் முக்கியவிருத்தியுடையது. குடாக்கடலில் ஒரோவழிப் பிரயோகம் காட்டுதல் கூடுமாயின் அது, கங்கைக்கண் இடைச்சேரியென் பதுபோலும் இலக்கணவழக்கேயாம். முக்கியவிருத்திக்குப்பொருத்தமில்லாதவிடத்தில் மட்டும் இலக்கணைகொள்வது முறை.

குடாக்கடல்:—கோணவடிவாற் பரிச்சேதிக்கப்பட்ட கண்டசமுத்திரம்.

பெருங்கடல்:—அங்ஙனம் பரிச்சேதிக்கப்படாத அகண்டசமுத்திரம்; இது பூமண்டலத்தைச் சூழ்ந்து நாற்புறங்களிலுமுள்ளது; (சேரநாட்டருகுமுள்ளது.) சோழநாட்டருகில் இல்லாதது.

ரத்நாகரம்:—இது ரத்நங்களுக்குப் பிறப்பிடமென்னும் பொருளுடையதாய் மகராலயம் என்பதுபோலக் குடாக்கடல், பெருங்கடல் எல்லாவற்றையும் ஒருங்கேயும் தனியேயு முணர்த்தும் முக்கிய விருத்தியுடையது. இதை, 'மஹோததி' என்னும் சிறப்புப்பெயரோடு ஓரியைபுபற்றி வழங்குங்கால், பெருங்கடலொழிந்த குடாக்கடலேயிதன்பொருளாம். இதனைப் பின்வருமுதாரணத்தாலறியலாம்.

பசு:—என்பது ஆவின் ஆண் பெண் எல்லாவற்றிற்கும் உரிய பொதுப்பெயர்.

எருது:—என்பது ஆண்பசுவிற்கேயுரிய சிறப்புப்பெயர், (இவ் விரண்டும் ஒரியைபுபட்டுழி) அங்குமேய்வது பசுவோ? எருதோ? என்றவினாவில் பசுவென்ற பொதுப்பெயர் ஆண்பசுவை யொழித்துப் பெண் பசுவையே யுணர்த்துதல்காண்க. இவ்வாறே, கூவுவது சேவலோ? கோழியோ? என்ற அறிவினாவில் கோழியென்பது சேவலொழிந்த பேட்டை யுணர்த்திவருதலும் காண்க.

இவ்வாறே மாணவர் மஹோததி ரத்நாகரம் எனவழங்குமிடங்களில் ரத்நாகரமென்பது குடாக்கடலையே குறிக்குமெனவறிக. இவ் விஷயங்களை நண்பரவர்கள் கவனித்திருந்தால் இவ்வாராய்ச்சியினொரு தலைமுடிபெழுத முன்வந்திருக்கமாட்டார்களென்றே நம்புகிறேன். ஆயினும், அவர்களாக்ஷேபித்துவருமவற்றிற்குரிய சமாதானங்களையும் கீழே ஒருவாறு காட்டுகிறேன்.

இவ்வாராய்ச்சிக்கு நண்பரவர்களெழுதிய பூர்வசரிதச் சுருக்கத்துள், (யானெழுதிய வஞ்சிமாநகராராய்ச்சியில்) 13-ம் புறப்பாட்டின் பொருளையெல்லாம் விரித்தெழுதியாராயப்புகாது அதிலுள்ள 'விழுநீர் வேலிநாடுகிழவோன்' என்றதொடர் சேரனைக்குறிப்பதாகமட்டும் காட்டிவிட்டது ஒரு குறையென்று சொல்லுகிறார்கள்; அஃதுண்மையே ஆயினும் இப்புறப்பாட்டின் ஆராய்ச்சி மிகவிரிவுடையதாகுமாதலால் அதன் முடிவை முதலிற் குறிப்பாகக்காட்டிப் பின்பு மேற்கோள் வலியாராயுங்கால் விரித்தெழுதலாமென்று விட்டதேயன்றி வேறன்று.

மற்றும் அச்சரிதச்சுருக்கத்துள் 13-ம் புறப்பாட்டின் பொருளை ஐயமின்றிச் செவ்வனேயுணர்தற்குப் பெருந்துணையாமெனக்கருதி (யான்) எழுதியதாகச்சொல்லும் 21 வினாக்களும் பயனற்றனவா யொழிந்தனவெனத் துணிந்து சொல்லுகிறார்கள். அங்ஙனந்துணிந்தவர்கள் அவ்வினாக்களுக்கு முறையே விடையெழுதி அதுகொண்டு கவியின் கருத்து இப்படியிருக்கிறதென்பதைக்காட்டி அதற்கிணங்கப் பாட்டுக்குப் பொருளையெழுதி அதன்பின்பு. அவ்வினாக்கள் பயனற்

றனவாயொழிந்தன' என்னும் ஒருதலைமுடிபு சொல்லியிருந்தால் அது விசுவசிக்கத்தக்கதாயிருக்கும்." அவ்வாறன்றி ஒருதலைமுடிபு சொல்லியது நடுவுநிலைமையுடையதாகாது.

இனி, (ஆராய்ச்சியின் 2-ம் பத்தியில்) பெருங்கடலை மஹோததியெனவும், (குறிப்பிட்ட) குடாக்கடலை ரத்நாகரமெனவும் மாணவர் கருதியது தவறென்றும், அதற்குப் பிரமாணங்களில்லையென்றும் நண்பரவர்கள் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். சாதாரணமாகத் தெரியக்கூடிய விஷயங்களுக்குப் பிரமாணங்களைக்காட்டி இடத்தை நிரப்புவது மிகையென்று விட்டிருக்கலாம்; அல்லது விரிவஞ்சி விட்டிருக்கலாம். அதனால் அவர்சொல்வது தவறாய்விடமாட்டாது; பிரமாணமில்லாமற் போகவுமில்லை.

தனுஷ்கோடி ஸ்நாநம்பண்ணும் வைதிகோத்தமர் பலரும் தொன்றுதொட்டவழக்காக "மஹோததி ரத்நாகரயோ: ஸங்கமே" என்று சங்கற்பத்திற் சொல்லிவருகிறார்கள். இதனால் தனுஷ்கோடியானது, மஹோததியென்றவொருகடலும், ரத்நாகரமென்ற பிறிதொரு கடலும் கூடுமிடமென வெளியாகிறது.

இவற்றுள், எது? மகோததி? எது ரத்நாகரம் என்றுவிசாரித்தால் சிலர் 'வடபாலுள்ளது மகோததி; தென்பாலுள்ளது ரத்நாகரம்; என்றும் வேறுசிலர்தென்பாலுள்ளது மகோததி வடபாலுள்ளது ரத்நாகரம் என்றும் ஒரு நெறிப்படாதபடி சொல்லுகிறார்கள். இவற்றால் உண்மை தெரிதற்கிடமில்லை. ஆதலாலிதனை ஆராய்ச்சிசெய்தே நிச்சயிக்கவேண்டும்.

ரத்நாகரசப்தம் கடல்களுக்கெல்லாம் பொதுப்பெயரென்றே நண்பரவர்களாலும் ஒத்துக்கொள்ளப்பட்டது; அப்படியே அமரகோசத்திலுமுள்ளது. அதன்பரியாயமாகவே உததிசப்தமும் படிக்கப்பட்டிருக்கிறது. இதனால் இவ்விரண்டு சப்தங்களும் தனித்தனி இடம் நோக்கி ஓரிடத்திற் குடாக்கடலையும், பிறிதோரிடத்திற் பெருங்கடலையும் உணர்த்தற்குரியனவாம்.

மஹோததிசப்தம் அவற்றோடு பரியாயமாகப் படிக்கப்படாமையாலும் அடைமொழியாற்றலுடைமையாலும் குடாக்கடலையொழித்துப் பெருங்கடலையே யுணர்த்தும் வலியுடையதாம்.

உததி, ரத்நாகரம் என்னுமிரண்டுமொழிகளும் ஒத்தபொருளுடையவாயிருப்பினும் ஓரியைபுபட வழங்குமிடத்து ஒன்றை மஹத் சப்தத்தால் விசேடித்தால் அது குடாக்கடலையுணர்த்தாதொழித்துப் பெருங்கடலையே யுணர்த்துவதாகும். அதனோடியைந்து அடைபெறாது நின்ற பிறிதொன்று பெருங்கடலையுணர்த்துமாற்றலிழந்து குடாக்கடலையே யுணர்த்து மென்பது கூறாமலே பெறப்படும்.

இம்முறைமையால் மாணவர் சொல்வதில் 'மகோததி' என்பதற்குப் பெருங்கடல் என்றும் 'ரத்நாகரம்' என்பதற்குக் குடாக்கடல் என்றும் பொருள்படுவதல்லது பிறிதில்லை. இங்கு தனுஷ்கோடியின் வடபாலுள்ளதே மகோததி யென்று துணியப்பட்டுவிட்டால் அதை மாணவர் ரத்நாகரமென்ற சொல்லால்வழங்கியது பிழையென்றே கொள்ளலாம்; தென்பாலுள்ளதே மகோததியெனத் தெளியப்பட்டால் மாணவர் சொல்லியது பிழையாகாதென்றே தெளியலாம். இவ்விஷயத்தில் யானறிந்தவற்றை யிங்குத்தெரிவிக்கின்றேன்.

சேரர்கடலருகுள்ளதொரு நகரிக்கு 'மகோதை' என்றபெயர் தமிழ்நூல்களில் வழங்கப்பட்டிருப்பது கற்றார் பலரும் அறிவர். அப்பெயர் கேட்டமாத்திரத்தாலே வடமொழித்திரிபாய்த் தமிழில்வந்து வழங்கும் பெயரென யாருமறியலாம். இது வடமொழிவழக்கிற் பெண்பாற்சொல்லாகிய நகரிப்பெயராமாதலால் "ஆவிறஜ"யாக வருதற்குரிய "மஹோதா" என்றவடமொழிப் பெயரென்றறியலாம். இதிற் பெண்பாலெழுத்தான ஆகாரம் ஒழிந்தபகுதி "மஹோத" என்றிருக்க வேண்டுமென்றறியலாம். இம்மட்டும் சாதாரணத் தமிழுணர்ச்சி கொண்டறியத்தக்கது.

இனி ஸம்ஸ்கிருதவுணர்ச்சியாளுமாராயின் "க்ஷீரோதி" (பாற்கடல்) "லவணோதி" (உவர்க்கடல்) "க்ருதோதி" (நெய்க்கடல்) முதலிய சப்தங்களைப்போலவே 'மஹோதி' சப்தமுமிருப்பதால் அவை நிலைமொழிப்பொருட்கியைந்த கடலை யுணர்த்துதல் போலவே இதுவும் நிலைமொழிப் பொருட்கியைந்த (பெருங்) கடலை யுணர்த்துமென் றறிய வேண்டும். இதில் நிலைமொழியாது? வருமொழியாது? எனவாராயின் நிலைமொழி 'பெருமைப்பொருளுணர்த்தும் மஹத் சப்தமாயிருக்க வேண்டுமென்பது வெளிப்படையாயார்க்கும் தெரியத்தக்கதே. வரு

மொழியை 'க்ஷீரோதி' 'லவணோதி' முதலிய சப்தங்களின் வியுத்பத்திகொண்டுபார்த்தால் அது, 'உதகஸ்யோதஸ்ஸம்ஜ்ஞாயாம்: உதீ ... வஹவாஸ; ஜூத் ம்ணஃ' என்றன்முதலிய வியாகரணவிதிகளால் நீரையுணர்த்தும் உதகசப்தம் திரிந்து விகாரப்பட்டு உத சப்தமாயிற் றென்றறியலாம். இவ்விரண்டன் சமுதாயமே மஹோதி சப்தமெனவறியத்தக்கது.

இதில் நிலைமொழியாய்நின்ற மஹத்சப்தம் பெருமையையும், வருமொழியாய்த்திரிந்துநின்ற ஓதசப்தம் கடலினையும் உணர்த்துமாதலால் இவ்விரண்டுங்கூடியதொடர் பெருங்கடலென்னும் பொருளுணர்த்துவதாயிற்று. இவ்வாறே க்ஷீரோத முதலிய கடற்பெயர்களுள்ளும் கண்டுகொள்க. இத்தொடர்மொழிகளுள் வருமொழியாய்நின்று கடலையுணர்த்திவரும் ஓதசப்தமே பிரிந்துவந்து தமிழிலும் "ஓதம்" என்று கடலுக்கு ஒரு பெயராயிருத்தலுங் கண்டுகொள்க. ஆதலால் மஹோத: என்பது பெருங்கடலையுணர்த்துமொரு பெயராமென நன்குதெளியத்தக்கது. இது தொடர்மொழியாதலால் மஹோததிசப்தம்போலவே நிகண்டுமுதலியவற்றிற் சேராமலும், பெருவழக்கில்லாமையால் 'வாரிதி' 'ஜலதி' முதலிய கடற்பெயர்கள்போல் காவியப்பிரயோகங்களிற் காணாமலும்போயிற்று. ஆயினும் இதுசாஸ்திரசித்தமான பெயராதலால் இப்பெயரடியாக மகோதை யென்னும் ஊர்ப்பெயர் பிறக்கத்தடையில்லை.

இவ்வாறே 'மஹோததி' என்ற பெயரும் மஹத்+உதகம் என்ற இரண்டுபதங்களை உபபதமாகவுடையதொரு தொடர்மொழி. இதற்கு, 'மிக்கநீரைத் தாங்குமிடமேன்பது பொருளாகும். (இதுவும் 'மகோதம்' என்பதுபோல உதகசப்தம்திரிந்த இடுகுறியாற்றலுமுடையது) மகோதம் என்பதற்கு "மிக்கநீரையுடைய இடம்" என்பது பொருளாகும். (கடலைக்கருதி) "மிக்கநீரைத் தாங்குமிடம்" என்பதிலும், "மிக்கநீரையுடைய இடம்" என்பதிலும் சொல்லும் முறையில் வேறுபாடுண்டேயல்லது பொருளில் வேறுபாடு சிறிதுமில்லையென்பது அறிவுடையோரால் நன்கு அறியத்தகும்.

ஆதலால் மகோதம் என்பதும் மகோததி யென்பதும் சிறிதும் வேறுபாடில்லாத ஒருபொருள் குறித்த பரியாயப்பெயராமென நன்கு

T. 119

தெளியத்தக்கது. இதனால் சேரநாட்டோரான மகோதையினருகு மகோதம் என்று பண்டையோர் வழங்கியகடல் மகோததியின்வேறாகாத பெருங்கடலேயாம் என்பது சாஸ்திரசித்தமாயறியப்பட்டது.

இனி அம்மகோததியானது மகோதையினின்றும் தமிழ்நாட்டையடுத்து எதுவரையுளதாகுமென்றிடஞ்சுற்றிப்பார்ப்போம். சேரர்க்குச் சிறந்தகடலிதுவென்று நண்பரவர்கள் எடுத்துக்காட்டியவிடத்து "பெரிய நீர்வேலைசூழ்ந்து,வாசமேகமமுஞ்சோலை வயலணியனந்தபுரம்" என்ற திருவாய்மொழிவாக்கியத்தால் திருவனந்தபுரம் பெரியநீர்வேலை (மகோதக்கடல்) சூழ்ந்திருப்பதாகத் தாமேசொல்லித் திருவனந்தபுரத்தருகிருப்பது பெருங்கடலென ஒத்துக்கொண்டிருப்பதால் அது மகோததியாமென்பது நிர்விவாதமாயிற்று. அக்கடலினை அவர்கள் காட்டியபிரமாணமே 'மகோத' என்பதனளவிலே 'பெரியநீர்' என்று மொழிபெயர்ப்பாய்க் கூறியிருப்பதும், அதுவே 'விழுநீர்' 'மிக்குநீர்' என்ற புறநானூற்றுச் செய்யுளுரை வழக்கோடு ஒற்றுமையுடையதாயிருப்பதும் இங்குகவனிக்கத்தக்கன.

இப்பால் இலங்கையிடைப்பட்ட கடலைப்பற்றி ஆராய்வாம். "[illegible] மஹோததி:" "[illegible]" என்றமஹாநாடக சுலோகத்தில் மஹேந்திரகிரிக்கும் இலங்கைக்கு மிடைப்பட்டகடல் மஹோததியென்று வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் அக்கடலே வான்மீகத்தில் "[illegible]" என்று மகார்ணவசப்தத்தாலும், "[illegible]" என்று மகோததி சப்தத்தாலும் வழங்கப்பட்டுள்ளது. இங்கு இக்கடலே அர்ணவ சமுத்ரமுதலிய பெயர்களாலும் பலவிடங்களிற் சொல்லப்பட்டுள்ளது. அப்பெயர்களெல்லாம் மகோததிக்குமுரிய பொதுப்பெயராதலால் அவை அக்கடலை மகோததியன்றென்று சாதிக்கமாட்டாவாம். அவ்வாறே ரத்நாகர சப்தப்பிரயோகமிருந்து காட்டப்பட்டாலும் அதுவும் அக்கடலை மஹோததியன்றென்று சாதிக்கமாட்டாதென்பது நன்கறியத்தக்கது.

இனி, அதற்கப்பால் தாம்பிரபருணீசங்கம சமுத்திரத்தை, நண்பரவர்களே "[illegible] மஹோததௌ"

என்ற ரகுவம்சவாக்கியத்தால் மகோததியாமென்று காட்டிவலியுறுத்தி விட்டார்கள். இதனால் இதுவும் நிர்விவாதமாயிற்று.

இனி இதன்வடபால் தனுஷ்கோடியளவுமுள்ள கடலைப்பற்றி யாராய்வோம். ராமாயண சரித்ர சம்பந்தமான சேதுபந்தன மிதன் கண்ணதே. இதுவும் மகோததி யென்பதற்கு அநுகுணமாகவே வான்மீகப்பிரயோகங்கள் பலவுள்ளன. அவற்றுட் சிலவருமாறு:—

1. "நஹி தம் பரிபச்யாமி யஸ்தரேத மஹார்ணவம் (யுத்தகா. 1-3)
2. "அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே:" ( ,, -21-1)
3. "மஹார்ணவம் க்ஷோபயிஷ்யே மஹாதாநவஸங்குலம்" ( ,, ,, 24)
4. "[illegible] மஹோததி:" ( ,, ,, -29)
5. "[illegible] மஹார்ணவ" ( ,, 22-1)
6. "[illegible] மஹோததி:" ( ,, -22-15 )
7. மஹோததிர் [illegible]" ( ,, 22-30)
8. "[illegible] மஹோததி:" ( ,, -22-46)
9. "[illegible] மஹோததி:" ( ,, -22-48)

என்றிவ்வாறு சேதுபந்தன சமுத்திரம் மகோததியென்று பலவிடங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. இதுகாறுங் கூறியவாற்றால் மகோததி என்னும் பெருங்கடலானது மகோதையென்னும் சேரர்நகரி தொட்டு தனுஷ்கோடியளவும் தமிழ்நாட்டையிடமாகச் சூழ்ந்திருப்பதாக நிரூபிக்கலாயிற்று. இனிப் பரிசேடத்தால் தனுஷ்கோடியில் இம் மகோததியோடு சங்கமிக்கும் பிறிதொருகடலே (வைதிகர் தனுஷ்கோடி ஸ்நாநசங்கற்பத்திற் சொல்லும்) ரத்நாகரமென்றறியத்தக்கதாயிருக்கிறது. ஆதலால் மாணவர், தனுஷ்கோடியின் வடபால் வந்து சங்கமிக்கும் வங்காளக்குடாக்கடலை ரத்நாகரமென்று கருதியது தவறாகாதென்று தோன்றுகிறது.

இனி, வங்காளக் குடாக்கடல் மகோததியாகாதென்று நிரூபிக்கவும் சரித்திரரூபமான சான்றுகளுள்ளன. அவை பின்வருமாற்றாலறியலாம். மணிமேகலையுள், 'பொன்னிறூசி பசுங்கம்பளத்துள், துன்னியதென்னத் தோடுகடல் உழக்குழி' என்ற அடிகளால், புகார் நகரத்து வணிகனொருவன் றனதுமரக்கல மூழ்கிவங்காளக் குடாக்கடலிலுழந்த செய்தி சொல்லியவிடத்து அக்கடல் தோடுகடல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தொடுகடல் என்ற சொல்லுக்கு, சகரரால் தோண்டப்பட்டகடல் என்பது பொருளாம். இது வடமொழியுள் சகரரால் தோண்டப்பட்டது என்னும் பொருளில் 'சாகரம்' எனவழங்கப்படும். இதனால் சாகரமும் தொடுகடலும் ஒன்றேயாமாதலால் தொடுகடலாகிய குடாக்கடல் தோடாக்கடலாகிய மகோததியாகாதென நன்கறியத்தக்கது.

அன்றியும், இக்கடலே கங்காசங்கமக் கடலாதலால் அது சகரராற்றோண்டப்பட்டதென்று பிரசித்திபெற்ற புராதன சரித்திரசாக்ஷியும் இதனை வலியுறுத்துகின்றது. கல்வியிற் பெரியகம்பரும் "சகரர் தொட்டலாற் சாகரமெனப் பெயர்தழைப்ப, மகரவாரிதி சிறந்தது" என்றதிசயிக்கிறார். இங்கு அவ் வதிசயமாவது, பொதுப்பெயரால் சிறப்புப்பொருள் உணர்த்தப்படுதல் உலகத்தியல்பு; சிறப்புப்பெயரால் பொதுப்பொருள் உணர்த்தப்படுதல் வேறெங்குங்கண்டதில்லை; சாகரம் என்னும் சிறப்புப்பெயரால் பொதுப்பொருளாகிய எழ்பெருங்கடலும் வழங்கப்படுதலாலிதன்பெருமை யென்னென்று சொல்வேன்! என்றதிசயித்தலாம். இதனால், கங்காசங்கமத்தாலுண்டாகிய விழுப்பமுடைமையின் பெருமையோடொருபுடை யொப்புமையுடைய வடிவப்பெருமைபற்றி யேழ்பெருங்கடலும் சாகரமெனவழங்கப்படுமென் றறியத்தக்கதாம். இது தொடுகடலுக்கும் ஒக்கும். இங்குள்ள ஒப்புமை, "புறங்குன்றிகண்டனையர்" என்புழிப்போல்வது

இதுகாறுங் கூறியவாற்றால் மகோதைமுதல் தனுஷ்கோடிவரையுள்ளகடல் மகோததியே யென்றும், கங்காசங்கமமுதல் தனுஷ்கோடிவரையுள்ளகடல் மகோததியன்றென்றும் அபாதிதப்பிரமாணங்களால் நிரூபிக்கப்பட்டன.

இனி வங்காளக்குடாக்கடலும் மகோததியாமென்று கருதி நண்பரவர்கள் காட்டிய பிரமாணமொன்றேனும் அவர்கள் 'கக்ஷிக்குச் சாதகமாயில்லை யென்பதையும் இங்குக்காட்டுகிறேன்.

4-ம் பத்தியில் ,,ஃபெளரஸ்த்யாநேவ-ஜயந்-நாஃஃ" என்ற ரகுவம்ச காவியவாக்கியத்தை நண்பரவர்கள் தம்கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டியிருக்கிறார்கள். இதிற்சொல்லிய மஹோததி மாணவர் கருதிய மகோததியன்றென்று நிரூபிப்பதாயிருந்தால் அது வங்காளக் குடாக்கடலையே குறித்ததென்று நண்பரவர்கள் நிரூபித்திருக்கவேண்டும். அப்படி நிரூபிக்கப்படாமையால் அது மாணவர்கருதும் பெருங்கடலாகிய மகோததியை விலக்குவதன்றியே பெரும்பான்மை பற்றிய வழக்காய்ப் பிறகடலையும் தழுவக்கூடுமாயினும் அவற்றுட் சிறப்புடைய பெருங்கடலே உவமையிற் சிறக்குமாதலால் அத்துணைசிறவாதகுடாக் கடலே உவமையாகாதவாறு விலக்கப்பட்டதெனவறியத்தக்கது. ஆதலாலிது மாணவர்கூற்றை விரோதிப்பதாயில்லை.

இனி 5-ம் பந்தியில், "இவ்வாறு கீழ்த்திசையிலுள்ள தேசங்களையெல்லாம் கடந்துசென்று ஜயசீலனான ரகுவீரன் தாலீவனத்தாற் பசுமை பூத்து விளங்கிய மகோததியின் கரையையடைந்தான்" என்று கூறி, ,,ஸ்ரீதாலீவநஸ்யாமம்-உபகண்டம்-மஹோததே:" என்ற வாக்கியத்தாற் குறித்த மகோததி வங்காளக்குடாக்கடலே யாமென்று சாதிக்கவருகிறார்கள். இங்கு, அவர்களே "கீழ்த்திசையிலுள்ள தேசங்களையெல்லாங் கடந்துசென்று மகோததிக்கரையை யடைந்தானென்று சொல்லுதலால், இமயமலையையடுத்துத் தரைவழியாக வங்காளக் குடாக்கடலின் வடபாலுள்ள தேசங்களையெல்லாம் கடந்து பூர்வமஹா சமுத்திரக்கரை யடைந்தானென்று பொருள்படுமேயல்லது வங்காளக் குடாக்கடற் கரையடைந்தானென்று பொருள்படாது. அன்றியும், அம்மகோததிக்கரையடைந்த பின்பு வலமாகத்திரும்பித்தெற்கு நோக்கிவரும் பொழுதன்றோ ஸுஹ்மர்களையும் வங்க அரசர்களையும் அடிப்படுக்கவேண்டும். அங்குச்சொல்லிய மகோததிக்கரை வங்காளக்குடாக் கடற்கரையாயின் "கீழ்த்திசையிலுள்ள தேசங்களையெல்லாம் கடந்து சென்றான்" என்றமையால் ஸுஹ்மர்களையும் வங்கதேசத்தரசர்களையும் அடிப்படுத்தபின்பன்றோ கடற்கரையை யடையவேண்டும். அங்ஙனமன்றிக் கடற்கரையடைந்த பிற்பாடே அவர்களை யடிப்படுத்ததாகக் கூறுதலால் கீழ்பெருங் கடற்கரையினின்றும் திரும்பித் தென்றிசை நோக்கிவருங்கால் வங்கதேசத்தரசர் முதலியோரை யடிப்படுத்ததாகக் கொள்ளுவதே பொருத்தமுடைத்தாயிருப்பதால் இங்குக்காட்டிய மகோததிவங்காளக்குடாக்கடலாகாதென் றறியத்தக்கதா யிருக்கிறது.

இதன்பின்பு "கலிங்கதேசத்தரசனை வென்று கீழ்கடற்கரையோரமாக நெடுகவந்து காவேரிநதியைக் கடந்து தெற்கேயுள்ள பாண்டிய தேசத்தையடைந்தான்" என்னுமளவும் மறுக்கப்படாதமைந்துள்ள வங்காளக்குடாக்கடலைக் குறித்து மகோததி யென்ற பிரயோகம் ஒன்றேனும் நண்பரவர்களாற் காட்டமுடியாமற் போயிருப்பதும் இங்கு நோக்கத்தக்கதே.

இனி நண்பரவர்கள்காட்டிய "தாம்ரபர்ணீஸமேதஸ்ய முக்தாஸாரம் மஹோததே:" என்ற பிரமாணத்திலுள்ள மகோததிசப்தம் வான்மீகப்பிரயோகங்களுக்கநுகுணமாகப் பொருட்குவாதையில்லாமல் மாணவர் கொள்கையை வலியுறுத்துதலால் நண்பரவர்கள் கொள்கைக்குச் சிறிதும் சாதகமில்லையென்பது முன்னமே நிரூபிக்கப்பட்டது; ஆனால் நண்பரவர்கள் தாம்பரபருணீ சங்கமக்கடலை "குடாக்கடல்" என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அக்கடல் முன்பு மகோததியாயிருந்து மேருசிகரங்களாலிலங்கை யுண்டானபின்பு குடாக்கடலாகத்தோன்றினாலும் அதற்கு முன்பிருந்த பெயருமில்லாமற் போய்விடமாட்டாது. இதனால், தாம்பிரபருணீ சங்கமுதல் தனுஷ்கோடிவரையு முள்ளகடலை மஹோததி யென்று வழங்கவேண்டுமேயன்றிக் குடாக்கடலென்று வழங்குதல் முறையன்றெனக. அதைக்குடாக்கடலென்பது இக்காலவழக்கேயன்றி வேறன்று. தம்பிரபருணீ சங்கமந்தொட்டுத் தனுஷ்கோடிவரையுமுள்ள கடல் தென்கடலாகிய மகோததியாதலால் அது தொட்டகடலாகிய குடாக்கடலாகாதெனவறிக.

இனி 6-வது பத்தியில், "பதிர்மஹேந்த்ரஸ்ய மஹோததேஸ்ச" என்ற வாக்கியத்தால் கலிங்கதேசத்தரசன் சொல்லப்பட்டிருப்பதால் இதிலுள்ள மகோததி கலிங்கதேசத்தை யடுத்துள்ள வங்காளக் குடாக்கடலாயிருக்கவேண்டு மென்கிறார்கள்; அதனுடன் சொல்லப்பட்ட மகேந்திர பர்வதமும் கலிங்கதேசத்தருகிருப்பதாக நண்பரவர்கள்காட்டியிருந்தால் நன்றாயிருக்கும். மகேந்திரபர்வதம் தென்கடலருகுள்ளதாக வான்மீக முதலியவற்றால் பிரசித்திபெற்றிருக்கிறது. அதனுடன் சேர்த்துச் சொல்லப்பட்ட மகோததியும் தென்பெருங்கடலென்று கொண்டு அதுவரையுள்ள நாட்டை அவன் அடிப்படுத்தியிருந்தான் என்று ஏன்கொள்ளக் கூடாது? கூடுமாயின் தென்கடல் மஹோததியேயாமாகையால் இதுவும் மாணவர்கொள்கைக்குப் பாதகமாகிறதில்லை

ஆதலால் நண்பரவர்கள் 7-ம் பத்தியிற்றொகுத்துரைத்த ஆதரவுகள் மூன்றும் தம்கக்ஷிக்குச்சிறிதும் சாதகமாகாது மாணவர்கக்ஷிக்கே அநுகூலமாயுள்ளன.

இனி 8-ம்பத்தியில், தைத்திரீய ஆரண்யகத்திலிருந்து ‚‚யஉடிமாஉ ஜஹதொண-ஃவாஉவிஹராஜஃ நஃ’’ என்ற சுருதிவாக்கியத்தைத் தம் கக்ஷிக்கு ஆதரவாகக்காட்டி இந்த சுருதிக்கு, ஸூர்யன் வங்காளக் குடாக்கடலில் உதிக்கிறானென்றே அர்த்தம் சொல்லவேண்டுமென்றும் அதனால் அது மகோததியாயிருக்க வேண்டுமென்றும் நண்பரவர்கள் நிச்சயிக்க வருகிறார்கள். இப்பொருள் உண்மையிலில்லை யாயினும் தோற்றத்தாலாவது சித்திக்கிறதாவென்று பார்ப்போம். (தோற்றத்தால்) சூரியோதயமாமிடமாகச் சுருதியிற் சொல்லிய மஹார்ணவம் வங்காளக்குடாக்கடலேயாமானால், இலங்கைமுதலிய பிறவிடங்களிலிருந்து பார்ப்பவர்களுக்கும் சூரியன் வங்காளக்குடாக்கடலிலுதிப்பதாகத் தோன்றவேண்டுமே. அப்படித் தோன்றாமையால் அங்கும் தோன்றுகிறபடி கீழ்பெருங்கடலிலுதிப்பதாகத்தானே சொல்லியதெனக் கொள்ளவேண்டும். அந்தக்கீழ் பெருங்கடலுமே மகோததியாகாதென்று மாணவர் ஆக்ஷேபிப்பாரானால் அது தவறேயாம். சுருதி, வங்காளக் குடாக்கடலின் மேற்றிசையில்மட்டு மிருந்துகொண்டு கூறினமையாலங்ஙனங் கருதியது என்று சமாதானங் கூறலியலாது. ஏனெனில் சுருதி, வடதுருவமுதல் தென்துருவமளவுமுள்ள பூமண்டல முழுதும் அறிந்துள்ளதென்பதை மற்றுமுள்ள அதன் வாக்கியங்கள் பலவற்றாலு மறியலாம் சுருக்கமாய் ‚‚வாயுஃஜீ’’ ‚‚ஜலாலயநீ’’ என்றவாக்கியங்களால் காற்றுப்போர்வை போர்த்துக்கொண்டு பூமி கடற்பள்ளியிற் கிடப்பதாகக் காட்டுகிறவேதம், பூமியை யெவ்வளவுதூரம் சுற்றிப்பார்த்தறிந்திருக்கிறதென்பதையும் நாம் சிறிது கவனிக்கவேண்டும். ஆதலால் நண்பரவர்கள்காட்டிய சுருதி வாக்கியமும் மாணவர் கக்ஷிக்குப் பாதகமாகமாட்டாது.

இனி 9-ம் பத்தியிற் பிற்காலத்தாரெழுதிவைத்த சிலபுத்தகங்களிற் சொல்லியிருப்பதை ஐதிகப்பிரமாணமென்று காட்டுகிறார்கள். ஆதாரமற்ற அவை பிரமாணமாம்பொழுது மாணவரெழுதியதும், யானெழுதுவதும்,நண்பரவர்களெழுதுவதும்பிரமாணமாகமாட்டாவெனக்

கருதுவதெதுபற்றியோ? தக்க ஆதாரமில்லாமற் கூறும் நம்மனோர்வாக்கியங்களிற் பிராமாணியமில்லை யென்பதை யுட்கொண்டிருக்கும் நண்பரவர்களுக்கே அப்புத்தகங்களிலும் பிராமாண்யபுத்தியில்லை யென்பது சித்திக்கு மாகையால் பிறரையுடன்படுத்தற்பொருட்டு அவற்றை ஆதாரவாகக் காட்டுவது சாதகமாகமாட்டாது.

இனி 10-ம் பத்தியில் விழுநீர் என்ற தொடர்மொழிப் பொருளை யாராயத்தொடங்கிப் பலவேறுபொருளுடையதாகப் பிரயோகங்காட்டுகிறார்கள். அத்தொடர் மொழிக்கு வேறிடங்களிலும் பிறிது பொருளில்லை யென்பது மாணவர்கருத்தன்று; அவை செம்பொருளேயாம். அத்தொடர் கடலையுணர்த்தும்பொழுது குறிப்புமொழியாகாதென்று மாணவர் சொல்லவில்லை. முந்நீர், விரிநீர், என்பனபோலவே விழுநீரும் விகுதிதோன்றாது நின்று கடலையுணர்த்துதல் பற்றியே அவ்வாறு நின்று கடலையுணர்த்தும் மகோதசப்தத்தின் மொழிபெயர்ப்பா மென்பதிலென்ன குற்றம்? அம்மகோதசப்தம் பிரசித்தமில்லாமையால் விளங்குதற்பொருட்டு அதன் பரியாயமாகிய மகோததி சப்தப்பிரயோகம் செய்திருப்பது தவறாகமாட்டாது.

"உரைகாரரும் மிக்கநீர் என்றே கூறினர்" என உரை தம்கட்சிக்கனுகூலமாயிருக்கிறதென்று கருதுகிறார்கள். அப்படியானால் விழுநீர் என்பதற்குச் செம்பொருள்பற்றிச் சிறந்தநீர் என்றன்றோ உரையெழுதியிருக்க வேண்டும். அங்ஙனமின்றி இலக்கணையால் மிகுதிப்பொருள்கொள்ளக் காரணமென்ன? செம்பொருளுக்குப் பொருத்தமில்லை யென்பதுதானே உரைகாரர் கருத்தாகவேண்டும்? விழுநீர் என்பதற்கு கடலையுணர்த்தும் ஆற்றலில்லையானால் முந்நீர் என்பதற்கும் கடலையுணர்த்து மாற்றலில்லையாக வேண்டுமே. நீர்மையொழிந்த புனலையுணர்த்தும் அடையடுத்த நீர்ப்பெயரடியாக அதனையுடைய கடல் என்னும் பொருளை வெளிப்படையாயுணர்த்துஞ் சொல் ஏதேனுமுண்டா? உண்டாயின் (அடையடுத்த) நீர்த்து, நீரது, நீரம், நீரை, நீரி என கடற் பெயரெங்கேனுங் கண்டதுண்டா? இப்பொருளில் விகுதிபுணர்ந்து கெடுதல் மரபாகாதா, விகுதிபுணர்ந்து கெடுவது மரபாயின் அங்ஙனம் புணர்ந்துகெட்டு அடையடுத்த நீர் என்னும் சொல் புனலையுணர்த்தும் அடையடுத்த நீர் என்னும் சொல்லின் வேறாகாதா? 'இளங்கொடி' என்பது இளமையுள்ளகொடி என்னும் பொருளிலும்,

இளமையுள்ள கொடிபோல்வாள் என்னும் பொருளிலும் வழங்குங் காற் சிறிதும் வேறுபாடிலதாமோ? இவ்வாறே "பாயினமேகலை" என்பதிலும் வேறுபாடில்லையா? அவ்வாறே விழுநீர், மிக்கநீர், என்றபுனலுணர்த்துந் தொடர்கட்கும் கடலுணர்த்தும் அத்தொடர்கட்கும் ஏன் வேறுபாடிருக்கலாகாது. சீரிய, அல்லது சிறந்தநீர் பெருங்கடலெனப் பொருள்படுமென்று மாணவர் சொல்லவில்லை; விழுநீர், மிக்கநீர், மகோ தம், மகோததி என்பனவே பெருங்கடலெனப் பொருள்படுமெனக் கருதியுள்ளார்; அது தவறன்று.

இனி 11-ம் பத்திரில் மஹோதஃ என்பது பெருங்கடல் என்ற பொருளில் யாண்டேனும் வந்திருப்பதுண்டா என்று வினவுகிறார்கள். "பேரோதமேனிப்பிரான்" என்ற முதலாழ்வார் திவ்யசூக்தியிலும், "பேரோதமேனியான் பேரோத நீர்கடைந்தான்" என்ற பெருந்தேவனார் பாடலிலும் வந்துள்ள 'பேரோதம்' என்ற தொடர்மொழியானது ('ஸ்ரீமுகம்'என்பது திரிந்த *திருமுகம்போல) மகோதத்தின் வேறாகாத ஒருபுடைமொழி பெயர்ப்பாய்த் திரிந்திருத்தலால் அதற்கு மூலமாயுள்ளது மகோதசப்தமாயிருக்கவேண்டு மென்று தெளியலாம். அன்றியும், வியாகரண சாஸ்திர சித்தமாகவே அது பெருங்கடலை யுணர்த்துமெனமுன்னமே காட்டப்பட்டிருக்கிறது. அமரகோசத்துள்ளும் கடலின் பொதுப்பெயர் சொல்லியபிறகு க்ஷீரோத லவணோத சப்தங்களைப்படித்து இவ்வாறே பிறகடல்களுக்கும் பெயராமாறுகாண்கஎன்று கூறியிருப்பதால் கிருதோத மதூதாதி சப்தங்களும் உண்டென்று தானே கொள்ளவேண்டும். கிருதோதாதி சப்தங்கள் நூல்களிற் காணப்படாமற் போனால் அநுசாசன சித்தமான அவை இல்லையென்று சொல்லலாமா? அவ்வாறே மஹோதசப்தமும் சாஸ்திர சித்தமாயிருப்பதால் உண்டென்றே கொள்ளவேண்டும். வடமொழி நூல்களை யெல்லாம் நாம் உணர்ந்துவிட்டோமா? நாம் உணர்ந்தமட்டில் காணப்படாத மொழிகளொன்றும் வடநூல்களிலிருக்கக்கூடா தென்பதா சித்தாந்தமாகுமா? ஆதலால் சாஸ்திரசித்தமான மஹோத சப்தத்துக்கு வடமொழி நூல்களிலிருந்து பிரயோகம் காட்டாமையால் அது கொள்ளத் தக்கதில்லை யென்று சொல்வது பொருந்தாததாயிற்று.

---

* "திருமுகப்பூந்தூதுச்செல்விட்டான்" (பெருந்தேவனார்பாரதம்.)

மிக்கநீர் என்ற தமிழ்த்தொடரும் மஹோததி என்ற வடமொழித் தொடரும் சிறிதும் வேறுபாடில்லாதபொருளுடையனவாய் மகோ ததியை யுணர்த்துமென்று முன்னர் நிரூபிக்கப்பட்டு விட்டமையால் 11-ம் பத்தியில் நண்பரவர்கள் கூறிய முடிவு பாதிக்கப்பட்டதாயிற்று.

இனி 12-ம் பத்தியில் மஹோததி யென்பது குறிப்பிட்டவொரு கடலுக்கு மட்டும் (அதாவது சேரர்கடலுக்கு மட்டும்) சிறப்புப் பெய ரென மாணவர்கருதி யிருப்பதாகக் கற்பித்துக்கொண்டு வாதிக்கிறார்கள். அது கடலுக்குச் சிறப்புப்பெயராகுமேயல்லது சேரர்கடலுக்குச் சிறப்புப் பெயராகாது என்பதே மாணவர்க்குடம்பாடெனமுன்னமே காட்டப்பட்டது. இக்கற்பனையை ஆதாரமாகக்கொண்டு கூறும் ஆக்ஷே பங்களெல்லாம் பயனற்றனவாயின. நம் பூர்வீகத்தமிழ்ச்சான்றோர் கள் வடமொழிவழக்கறியாதவர்களென்று நண்பரவர்கள் கருதுகின் றார்கள். அதனை யேதேனும் ஓராதாரங்காட்டி நிரூபித்திருந்தால் அங்கீ கரிக்கலாகும்.

நண்பரவர்கள் காட்டும் பெருங்கடல் முதலிய பிரயோகங்களில் பெரும்பாலன பொதுவென்று அவர்களே யொத்துக்கொள்ளுகிறார்கள். பொதுவழக்கிலுள்ளது சிறப்புப்பொருள்களுக்கெல்லாம் நியதமாயுரித் தாமென்று சித்திக்கமாட்டாது. பாம்பிற்குப்படமுண்டென்று பொதுப் படக் கூறுவதால் சாரைக்கும் படமுண்டென்று சித்திக்கிறதில்லை. ஆகையால் அப்பொதுப் பிரயோகங்களைக்கொண்டு சோழர்க்குப் பெருங்கடலுண்டென்று துணிதற்கிடனின்றாம்.

சிறப்புப் பிரயோகங்களில் சோழருக்குப் பெருங்கடலுரியதாகக் காட்டிய பிரயோகங்கள் மூன்றேயுள்ளன. அவை 1. வீங்கோதம் 2. நீல மாக்கடல், 3. நெடுங்கடல் என்பனவாம். இவற்றுள் வீங்கோதம் என்பதற்கு அடியார்க்குநல்லாரேனும், அரும்பதவுரைகாரரேனும் பெருங்கடல் என்று பொருளெழுதவில்லை. முத்தைத்தருதற்கு ஓதம் எழுவாயாய் நிற்றலால் அம்முத்தைத்தந்து கானற்பூங்கோதையைக் கொண்டுசெல்லுங்குறிப்பினால், அக்கடல் கானலளவும் பொங்கிவரு மியல்புடைமையையே இங்கு 'வீங்கு' என்னும் வினையடைகுறிக்கு மாதலால் அது பொங்கிவருங் கடல் என்று பொதுப்பொருள் படுவ

தல்லது பெருங்கடலென்ற சிறப்புப்பொருள்படுவதின்றாம். ஆதலா லிது நண்பர்கூறிக்குச் சிறிதும் சாதகமாகவில்லை.

இனி, நீலமாக்கடல் என்ற இரண்டாவது பிரயோகம் மணிமேகலை 8, 17-ல் உள்ளது. அக்கடல் காலைஞாயிறுதோன்றுவதாகக் கூறப்பட்டுள்ள தென்றுமட்டும் காட்டியுள்ளார்கள்; அது மணிபல்லவத்துக்கும் கிழக்கேயுள்ள பெருங்கடல் என்பதை மறந்துவிட்டதுமன்றி உவவனத்துக்கு அருகேயுள்ள புகார்க்கடலென்றும் தவறாகக் கருதியுள்ளார்கள். இவ்விஷயம் வெளிப்பட்டுவிட்டால் அது சோழர்கடலென்று சொல்லற் கிலையாதென்பது தெளிவாய்விடும். அன்றியும், மணிபல்லவத்தினின்றும் நோக்குவார்க்குக் காலைஞாயிறுதோன்றுவதாகத் தெரியுங்கடல் வங்காளக்குடாக்கடலாகாது கீழ்பெருங்கடலேயாமாதலால் இதுவும் மாணவர்கூறிக்குப் பாதகமாகமாட்டாது.

இனி மூன்றாவது பிரயோகம் திருநாவுக்கரசு நாயனார் திருவொற்றியூர்த்திருத்தாண்டகம் நான்காம்பாட்டில், "விரையாதே கேட்டியேல் வேற்கணல்லாய் விடுகலங்கள் நெடுங்கடலுள் நின்றுதோன்றும், திரைமோதக் கரையேறிச் சங்கமூருந் திருவொற்றியூர்" என்றதிலுள்ள நெடுங்கடலாம். இதில் * விடுகலங்கள் நின்று தோன்றும் என்ற குறிப்பால் அக்கலங்கள் தங்கி நிற்றற்குரிய அடைகரையே யிங்கு நெடுங்கடல் எனக்கூறப்பட்டதென வறியத்தக்கது. இங்கு, 'நெடுங்கடல்' என்றதில் நெடுமை பெருமையின் பரியாயமாகாது அதன் ஏகதேசமாகிய நீட்சிப்பொருளில் மட்டும் முக்கிய விருத்தியுடையதாம்; ஆகவே கரையருகு மரக்கலங்கள் வரிசையாக நெடுந்தூரம் நிற்குந்துறையின் நீட்டத்தையே யுணர்த்தினமையால் நெடுங்கடல் என்னும் இது பெருங்கடலையுணர்த்தியதாகாது.

இனிச் சோழர்கடலுக்குப் பெருங்கடல் என்ற பிரயோகம் தேடிக்கொணர்ந்து காட்டப்பட்டாலும் அங்கும் பெருமைக்கு முக்கிய விருத்தியில்லாமையால், ஐங்காயத்துட் பெருங்காயமென்பதிற் பெருமை காயத்தின் வடிவப்பெருமையுணர்த்தாது கௌணவிருத்தியால்

---

* விடுகலம்—கணக்கம் சேர்ந்துழி அதனைத்தீர்க்கும்பொருட்டுச் சும்மா விட்டுவைத்திருக்கும் கலங்கள்.

விரியமிகுதியை யுணர்த்துவதுபோலக் கௌணவிருத்தியால் விழுப்ப மிகுதியே யுணர்த்துமென வறியத்தக்கது.

இங்கு அவ்விழுப்பமுடைமையே செம்பொருளாமாறு "விழுநீர்வேலி" என்று கூறியிருக்கவும் அச்செம்பொருளை யொழித்து கௌணவிருத்திகொண்டு "மிக்கநீராகிய வேலி" என்று உரைகாரர் எழுதியதனால் விழுப்பமிக்குடைய சோழர்கடலிற் கவிகருத்தில்லை யென்பதை அவர் நன்கறிந்தவரென்றறியக்கடவது.

பெருமைமீண்டு தன் விசேடியத்தின் இனப்பொருளின் வடிவப் பரிமாணத்தை யெல்லையாக அவாவி நிற்கும் என்பதும் இங்கறியத்தக்கது. இதனாலும் குடாக்கடலின் மிக்க மகோததியே பெருங் கடலென்றறியலாம்.

இனி வேலி என்னும் சொற்பொருளை யாராயினும் அக்கடல் சேரர்க்குரியதென்றே வெளியாகும். வேலி என்ற சொல் 'வேல்' என்ற பகுதியும் இகரவிகுதியும் பெற்றதொரு பகுபதமாயிருப்பதால் அது, வேலின்முட் கொம்பாற்றொடர்புடையதாகப் புலமுதலியவற்றைச் சுற்றியிடப்பட்டதொரு பாதுகாப்பு என்ற செம்பொருளுடையதாம். அது கௌணவிருத்தியால் வேன்முட்கொம்பானன்றிப் பிறவற்றாலிடப்பட்ட பாதுகாப்பிலும், இடப்படாதியல்பாகச் சூழ்ந்திருக்கும் பாதுகாப்பிலும் வழங்கப்படும். ஓரோவழிப் பாதுகாப் பொழியினு மொழியலாம்; சூழ்ந்திருத்தற்பொரு ளொழிதலாகாது. முழுதும் சூழ்தலில்லையாயினும் பெரும்பான்மை, அல்லது செம்பாகமாயினும் சூழ்தல்வேண்டும். அங்ஙனம் சூழ்தல் சோழநாட்டுக்கு ஒரு சிறிதும் பொருந்துவதின்று; வழக்குமின்று. சேரநாட்டுக்கெனில் "அகல்வயன் மலைவேலி" என்றும், "தண்கடல்வேலி நின்குடநாடு" என்றும் சொல்லப்பட்டமையால் ஒருபுறம் மலைவரிசையும் மற்றொருபுறம் கடலுமாக நாடு முழுவதையும் சூழ்ந்தொருவேலியாயமைதலின்

பொருத்தமும் வழக்கும் ஒருங்குள்ளனவாம். பொன்னும் வைரமுங் கூடியதொரு கடகத்தைப் பொற்கடகமென்றேனும் வைரகடகமென்றேனும் வழங்குதல் வழக்காறாயிழுக்காகாதவாறுபோலக் கடலும் மலையுங்கூடியதொரு வேலியைக் கடல்வேலியென்றாலும், மலைவேலியென்றாலுமிழுக்காகாது; அது சேரநாட்டுக்கே சிறப்பாயிருப்பதுமிங்கறியத் தக்கது.

இனி, சேரர்க்குரியதாக நண்பரவர்கள் காட்டிய இரண்டு பிரயோகங்களில் "நளிநீர்" என்பது கடற்பொதுப் பெயராதலால் பெருங்கடலாகிய சிறப்புப்பொருளையும் உணர்த்தும். அதுமாணவர் கொள்கையை விரோதிப்பதாகாது. இரண்டாவதாகக் காட்டிய "பெரியநீர்வேலி" என்பதிற் "பெரியநீர்" என்பது 'மஹோததி:' என்பதன் மொழிபெயர்ப்பாகவே பெருங்கடலையுணர்த்தி வேலிக்கு அடையாய், 'விழுநீர்வேலி', 'மிக்கநீர் வேலி' என்பவற்றுள்ள 'விழுநீர்', 'மிக்கநீர்' என்பவற்றின் பரியாயமாய்ப் பெருங்கடலையுணர்த்தி 13-ம் புறப்பாட்டிற் சொல்லிய 'விழுநீர்' என்பதும் மஹோததி: என்னும் சேரர்பெருங்கடலும் ஒன்றேயாமென்று காட்டிவிட்டமையால் இது நண்பரவர்கள் கொள்கையைப் பாதித்து மாணவர்கொள்கையையே சாதிப்பதாயிருப்பதும் இங்கு நன்கு கவனிக்கத்தக்கது.

பெருங்கடல் என்பது சேரசோழபாண்டியருள் ஒருவர்க்கேயுரியதாயிருந்தால்மட்டும் அதுசிறப்பாகக்கொள்ளலாமென்று நண்பரவர்கள் கருதுவது மாணவர்கருதியவழியின் வேறானவழியாதலால் அதுகொண்டு சொல்லும் ஆக்ஷேபங்களுள் ஒன்றும் மாணவர் கொள்கைக்குப் பாதகமாகமாட்டாதெனவறியத்தக்கது.

# இலக்கண வரம்பு.

பரதகண்டத்தில் வழங்கி விளங்கிய பாஷைகளுள்ளே தமிழ்ப் பாஷை ஒன்றுமே கண்ணுதற் பெருமானும், கழகமாந்தரும் சேர்ந்து நன்காராய்ந்தது என்றும், இலக்கணவரம்புடையது என்றும் பரஞ்சோதிமுனிவர் கூறுவர். கழகமாந்தர்=சங்கத்தார்.

திருவிளையாடற்புராணம்

கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ—

அவ்விலக்கணம் நம்போலிய அற்பமானுடர் புத்திகொண்டு அமைத்ததொன்றன்று. ஆதியிற் சிவபிரான் அகத்தியர்க்குபதேசித்தது. அகத்தியர் தொல்காப்பியர்க்குபதேசித்தது. தொல்காப்பியர் அதங்கோட்டு முனிவர் முதலிய பன்னிருவருக்கும் உபதேசித்தது. அப்பன்னிருவரும் பலர்க்குபதேசிக்கப் பாரம்பரியமாய் வந்து பூமியிற் பரந்தது. அதன் வகையும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து. இந்த ஐந்தும் முறையே ஒன்றற்கொன்று காரண காரிய சம்பந்த முடையது. அவற்றுள் எழுத்திலக்கணம் சொல்லிலக்கண வுணர்ச்சிக்குக் காரணம், எழுத்திலக்கணம் படியாமற் சொல்லிலக்கணம் படித்துணர்தல் ஒல்லுவதொன்றன்று. செல்லுகை தடைப்படும். இலக்கணவரம்புஞ் சிதையும். மகாசன விரோதமும் வரும்..

இது பற்றியே அகத்தியர், தொல்காப்பியர் முதலிய இலக்கண நூலாசிரியர்கள் யாவரும் தத்தம் இலக்கண நூல்களிலே எழுத்திலக்கணத்தை முதற்கண் ஓதினர். பின்னர் வழிநூல்களாய்வந்த நன்னூல், சின்னூல் முதலியவற்றின் ஆசிரியர்களும் எழுத்திலக்கணத்தை முன்வைத்தலாகிய அவர்கொள்கையைத் தழுவினர். இளம்பூரணர் முதலிய உரையாசிரியர்களும் அக்கொள்கையை மறுத்திலர். பிற்காலத்திலே வசனநடையிலே இலக்கணநூல் இயற்றிய தாண்டவராய முதலியார், விசாகப்பெருமாளையர், ஆறுமுகநாவலர் முதலிய அறி

ஞர்களும் அக்கொள்கையை மறுத்திலர். அன்றுமுதல் இன்றுவரை அதனை அநேகர் அநுசரித்துப் படித்துவந்தனர். இவருள்ளே அகத்தியர்முதலியசிலர் தவத்தான் மனந்தூயராய் முக்குணம் கடந்து இறைவனருளும் பெற்றவர். மற்றையோருள்ளுஞ் சிலர் அருட்பெற்றவர். சிலர் நுண்ணறிவாளர், தமிழுணர்ச்சியிலே யாவரும் பரிபூரணர். குறைவுடையார் ஒருவருமிலர்.

இவர் செயலும், இவர் கொள்கையும், இவரறிவும் ஒருபாற்கிடக்க இப்பொழுதையார் சிலர் எழுத்திலக்கணம்படிப்பிக்குமுன் சொல்லிலக்கணம் படிப்பிக்கவேண்டும் என்கின்றனர். நன்னூலைச் சொல்லதிகாரத்திலே தொடக்குகின்றனர். எழுத்திலக்கண விதிகள் இலகுவிற் புலப்படாதாம்! இதுவரையும்படித்துவந்தார்க்குப் புலப்பட்டதெப்படி? எழுத்திலக்கணம்படியாதவர்க்குச் சொல்லிலக்கணம் எப்படிப் புலப்படும்? அரிச்சுவடி படியாமல் ஆத்திசூடியிற் பிரவேசிக்கலாமா? நன்று! நன்று! "கண்டன மின்றியாங் கவியின் வண்ணமே"

எழுத்திலக்கணம் படியாதவர் பகுபதங்களை முடிப்பதும், தோன்றல் முதலிய விகாரங்களை அறிவதும் எப்படி? இயல்பாயும் விகாரமாயும் வரும் அல்வழி வேற்றுமைப்புணர்ச்சிகளை அறிவது எப்படி? புணர்ச்சியாலே வேறுபட்டிருக்கும் எழுத்துக்களையுஞ் சொற்களையும் அறிவதெப்படி? நன்னூற் சொல்லதிகாரத்தின் முதற்கண்வரும் "முச்சகம்" என்னுந் தொடர்மொழியின் நிலைமொழியை அறிவது எப்படி? அறைகுவன் என்பதைப் பிரித்துணர்வதெப்படி? சொல்லதிகாரத்தாற் பெறப்படுமா? தந்தைதாய் பேண் என்பதா? தந்தைதாய்ப் பேண் என்பதா? வழாநிலையாது?

ஈண்டுச்சிலர் கூறப்பட்டன, செய்யப்பட்டன என்பன போல வருஞ் சில செயப்பாட்டு வினைகளிலுள்ள படு என்னும் விகுதியை நீக்கிப் பெறு என்னும் பகுதியைச் சேர்த்து கூறப்பெற்றன, செய்யப்பெற்றன என்பனபோல முடிக்கின்றனர். படுவிகுதிஉணர்த்தும் பொருளைப் பெறு என்னும் பகுதி உணர்த்துமா? இரண்டுக்கும் பேதமில்லையா? பெறு என்னும் பகுதியின் பொருள் யாது? அது துணையாய் நிற்றற்குரிய இடம் யாது? இரண்டையுஞ் சமமாகக் கருதலால் இலக்கண வரம்பு சிதையாதோ?

இன்னும் சிலர் "கிரதி" "பொடி" என்பனவற்றிலே "இ" என்பது விகுதி என்றும், "முருகு" "குருகு" என்பனவற்றிலே "கு" விகுதி என்றும், "ஒளிறு" "இன்று" என்பனவற்றிலே "று" என்பது விகுதி என்றும் கூறுவர். இக்கொள்கையும் இலக்கணவரம்பில் அமையுமா?

இக்காலத்தார் யாவர்க்கும் இனிது விளங்குமாறு இலக்கணநூல்களை ஆக்கவேண்டும் என்றும், "பழையனகழிதலும் புதியனபுகுதலும் வழுவல" என்பதே அதற்கு விதி என்றும் சொல்வாருமுளர். இலக்கிய இலக்கணங்களைக் கிரமம்பெறக்கல்லாது விளக்கமில்லை என்று சிலர் கூறற்கும், பிழைப்பட்ட நூல்களைப் படித்தற்கும் காரணம்யாது? "பழையனகழிதல்" என்பது எதன்பொருட்டு எழுந்தது? பழைய இலக்கியமும், இலக்கணமுமாகிய நூல்கள் தக்கபாண்டித்தியமுடைய தக்கோர் செய்த நூல்களாம்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

# செந்தமிழ்நிந்தை சிவநிந்தையேயாம்.

அன்பினைந்திணையென் றறுபதுசூத்திரந்
திருவாய்மலர்ந்தசிவபெருமானே
கொங்குதேர்வாழ்க்கைச்செந்தமிழ்கூறினன்
மதிமலிபுரிசைத்திருமுகந்தந்தனன்
வள்ளுவர் நூற்குவளர்சிறப்புரைத்தனன்
கீரன்முன்றேன்றிக்கிளர்சினப்பாவும்
பொய்யாமொழிமுன்புனைந்துரைபாவும்
இயம்பினனன்றியுமெழிலார்தில்லையுள்
அடியார்க்கெளியனென்றருளித்தந்தனன்
வாசகங்கோவைவளம்பெறவரைந்தனன்
தொண்டத்தொகையுந்தொண்டர்புராணமும்
நிறைவினையெய்தஅடியெடுத்தீதளினன்

பரிவன்பாகத்தமர்ந்தபாவையும்
கொணர்ந்தேன்சொற்றனக்குளிர்கவிகூறினள்
ஈடாமுதலைமைநாமகள்நவின்றனள்
தந்தைபார்செவியில்மந்திரந்தந்தவன்
பகழிக்கூத்தன்பாடல்கேட்கவும்
பொய்யாமொழியெனும்புலவர்பாக்கேட்கவும்
தாமவர்தம்மேற்றமிழ்ப்பாட்டுரைத்தனன்
உருத்திரசன்மராயுரைவிரித்தருளினன்
நம்பியாண்டாரெனும்நம்பிதனக்கே
யும்பல்முகத்தோன்செம்பொருளுரைத்தனன்
காண்முகத்தவனைநானிலந்தன்னில்
வள்ளுவனுந்தமிழ்மாமறைபருளினன்
மணவாளயோகிவயின்றமிழ்மறைப்பொருள்
பெருமானரங்கன்பெரிதுங்கேட்டனன்
இவ்வாறெல்லாம்இயற்றமிழ்தன்னை
அரனயனரிமுதலாமுத்தேவரும்
மூத்தபிள்ளையும்முருகக்கடவுளும்
மலைமகள்கலைமகளாமணங்குகளும்
பேசினரெழுதினர்பிறப்பாடின
ரென்றாலிதன்சீரியம்பவும்போமோ
இப்பாரிலன்றோஇவையெலாமென்றால்
திருக்கைலாயம்சென்றசேரமான்
சிவபெருமான்றன்றிருச்சந்நிதியில்
உலாவெனும்நூலைப்புணர்த்தாங்கேற்ற
எல்லாத்தேவருமிருசெவிக்கமுதென
உண்டுகளித்ததிவ்வொண்டமிழ்மொழியைத்
தேவபாஷையாய்ச்செப்புதற்கியாதும்
ஐயமின்றாமாதலினமர்காள்
முத்தமிழுருவேமுனனோனுருவெனச்
சத்தியவசனசாத்திரங்கூறலால்
செந்தமிழ்நிந்தைசிவநிந்தையேயெனச்
சிந்தையிலுணர்ந்துசெந்தமிழ்போற்றி
வாழுமின்வாழுமின்வாழுமின்னீரே

ஸ்ரீ. சதாசிவப்பிள்ளை,
நாகை, நாஷனல் ஹைஸ்கூல்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்.

———

# திருநங்கோய்மலைச்சாசனம்.*

[கோயில்கர்ப்பக்கிரகம் வடபுறம் பொறிக்கப்பட்டிருக்கிறது.]

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவ(ர்)த்திகள் மலைஹா......மருதூரும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங்கொண்டு வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணியருளிய (2) ஸ்ரீதிரிபுவன வீரதேவறகு யாண்டு ௩௰௬-வது ரிஷப நாயிற்று பூர்வபக்ஷத்து திருதியையும் திங்கள் கிழமையும் பெற்ற உரோஹிணி (ர்) ஷத்துநாள் வடகரை ராஜராஜ வள நாட்டு மலைஸ்ரீ (3) ஜயங்கொண்ட சோழச்சதுர்வேதிமங்கலத்துப் பெருங் குறி மஹாஸபையோம் விளைநில வ்யாபாரண(ம்) இசைந்திட்டது. ராஜ ராஜ வளநாட்டு திருவாலிநாட்டு கனக..............(ப)......-வெந்தவ மூவராயர் உடையார் திருவீங்கோய் மூ(லை)ருடையார் கோயிலில் எழுந் தருளிவித்த ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரசுதேவற்கும் ஆலாலசுந்தரப்பெருமானுக்கும் (5) திருநற்கீரதேவற்கும் திருப்படி மாற்றுக்கும் விஞ்சநத்துக்கும் உடலாக நாங்கள் இவருக்கு விற்றுக் கொடுத்த நிலமாவது; இவ்வூர் பிடகை குலோத்துங்கசோழநல்லூர் கட்டளை (6) யிவ்வூர் வ்யாக்ருவி விளைநிலத்து ஆடவல்லா நதிக்கு கிழக்கு ஜயங்கொண்ட சோழவாய்க்காலுக்கு வடக்கு...........துரத் துத் தென்கிழக்கடையில் உ மா இந்நிலம் (7) இரண்டுமாவுக்கும் விலை யாக நிச்சயித்த அன்றாடு நற்காசு ரு இக்காசு ஐஞ்ஞூறும் இந்நிலம் இரண்டு மாவுக்கும் விலையாவதாகவும். இதுவே பொருள் மாவறுதிப் பொருள் சிலவோலை காட்டுவதல்லாததாகவும்.

---

* இந்தச்சிவஸ்தலம் குழித்தலை ரயில்வேஸ்டேஷனுக்கு வடபுறம் காவிரி யாற்றுக்கு வடகரையில் இருக்கிறது. முதலி மூவர்தானிருக்கின்றனர். நற்கீர தேவர் காணப்படவில்லை. ரயிலிலிருந்து பார்த்தாலே கோயில் தெரியும். அங்கு இந்த ஒரே சாசனம்தான் எழுதக்கூடியதாக விருக்கிறது.

# அரதனகிரிமலைச்சாசனங்கள்.†

[மலைமேல் அம்மன்கோயில் சுவற்றில் வடபுறம்
பொறிக்கப்பட்டிருக்கின்றன.]

ஸ்வஸ்திஸ்ரீ வீரமேதுணையாகவந்த யாகமேயணிபாகவுக்ரு
செங்கோ லோச்சி கருங்கல மந்து
புகழ்மாது விளங்க செயமாது (2) விரும்ப
நிலமகள் நிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர
ஏனை மன்னவ ரியலுற் றிழிதரத்
(3) திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி

விஜயாபிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து புவநிமுழுதுடை
யாளொடும் வீற்றிருந்தருளிய கோராஜ (4) கேசரிபன்மரான திரிபுவ
வநச்சக்கரவ(ர்)த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு ......
......................(5) ராஜமஹேந்த்ர வளநாட்டு மீகோட்டு நாட்டு
ப்ரஹ்மதேயம் குழித்தண்டலைப் பெருங்குறி மஹாசபையோம் மிதுந
நாயிற்று அமர (6) ..............புனர்ப்பூசமும் பெற்ற.........நாள்
இவ்வூர் நடுவிற் திருமுற்றத்து ராஜேந்த்ர சோழன் திருமண்டபத்தே
யிசெய்து (7) கூடிக்குறைவறக் கூடியிருந்து இந்நாட்டு குறுநாகநாட்டு
சிவபாதசேகரபுரத்து மலைவாசலுக்குத் தெற்கில் எழுநூற்றுவன் மடத்
திலே தேவரடியார் சிவயோகிகளுக்கு (8)-ம் தவஸிக்கும் அமுது
செய்கைக்கு வடக்கிற் கொங்கில ராஜராஜ புறத்திலிருக்கும் வியாபாரி
ச்சி சொலமாணி? தேன் நங்கைக்குச் சமைந்து இத்தன்மம் (9) செய்
விக்கிறது திருவாட்போக்கிமலை மஹாதேவற்கும் திருப்பள்ளியறை
நம்பிராட்டியாரையும் எழுந்தருளிவித்த நாடறிபுகழன் தாமோதரனான
பிள்ளைக் (10) கடியார்க்கு நாங்கள் விற்றுக்கொடுத்த நிலம் விலையா

† வாட்போக்கி என்றும் இரத்தினகிரி யென்றும் சொல்லப்படும், சிவாய மலை. இது குழித்தலை ஸ்டேஷனிலிருந்து தெற்கில் 5½ மைலிலுள்ளது. க்ஷேத்திரபுராணம் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பெற்றது.

வணம். எங்களூர் நிலத்துத் திருநாராயணவதிக்குக் கிழக்கு; ஐயன் வாய்க்காலுக்குத் தெற்கு; முதற்கண்ணாற்று (11) முதற் சதுரத்துண்டத்துக் கவுணியன் மாதவன் அரங்கன் நிலத்துக்குத் தென்மேற்கடையித்திருவுலகளந்தருளினபடி நிலம் அருள நிலம் காறும் விற்றுக்கொடுத்துக் (12) கொள்வதாக எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு 2. இக்காசு இரண்டும் இந்நிலத்துக்குச் சந்திராதித்தவரை நாங்களே இறை (13) யிறுக்கக்கடவோமாக, இறைகாவலாகக் கொண்ட காசு ௰௩ இக்காசு பதின்மூன்றும் ஆகக்காசு ௰௫. இக்காசு பதினைஞ்சும் இத்தேவர் வண்ணஸ்ரீதேவர் ஸ்ரீஹஸ்த (14) த்தால் கொண்டு இந்நிலம் காசும் விற்றுக்கொடுத்தோம். பெருங்குறிமஹாசபையோம். இந்நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும். இக்காசுக்கு இது (15) வேபொருள்மாவறுதிப் பொருட்சிலவோலையாவதாகவும். இதுவல்லது வேறுபொருள் மாவறுதிப்பொருட் சிலவோலை காட்டக் கடவதல்லாததாகவும். இப்பரிசிசைந்து இக்காசு பதினை (16) ஞ்சும் கொண்டு ..................மாணிதேன் நங்கைக்கும் சொலமாணி சூற்றிதேவிக்கும் சமைந்து இப்படி (17) விற்றுப் பொருளறக்கொண்டு விலையாவணஞ் செய்துகொடுத்தோம் (18) பெருங்குறி மஹாசபையோம் யிந்த நிலம். இப்படியே செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்ளப் பெறுவாராக (இனிகையெழுத்து.........).

ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்கி செயமாது விரும்ப
நிலமகள் நிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் (2) குலைதர
*ஏனை மன்னவ ரியலுற் றிழிதரத்
திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி

விஜயாபிஷேகம்பண்ணி வீரஸிம்ஹாஸநத்து புவனிமுழுதுடையாளொடும் (3) வீற்றிருந்தருளிய கோராஜகேசரி பன்மரான † திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 21-வது ராஜமஹேந்தரவளநா (4) ட்டு மீகோட்டு நாட்டு ‡ ப்ரஹ்மதேயம்

* 'விக்கலன் சிங்கணன் மேல்கடல்பாய' என்பர் மிஸ்டர் கோபிநாதராவ் சோழவம்சசரித்திரத்தில் (பக்—99).

† இதுவும் சரித்திரத்தில் காணப்படவில்லை. ‡ பிரும்மதேசம்.

குழித்தண்டலைப் பெருங்குறி சபையோம் கும்பநாயிற்றுப் பூர்வ பக்ஷத்து நாயிற்றுக்கிழ (5) மையும் வதசஷ்டிஶியும் பெற்ற திருவோணத்து நாள் இவ்வூர் நடுவிற் திருமுற்றத்து ராஜேந்திரசோழன் திருமண்டபத்தேயபி செய்து கூடிக்குறைவறக் (6) கூடியிருந்து இந்நாட்டு குறுநாக நாட்டு சிவபாதசேகரபுறத்து மலைவாசனுக்குத் தெற்கில் எழுநூற்றுவன் மடத்திலே தேவரடியார் சிவயோகிகளுக்கும் (7) தவஸிக்கும் அமுது செய்கைக்கு வடக்கிற் கோங்கில் ராஜராஜ புறத்துக் கைக்கோளர்களான......ரி மணிக்கும் கொள........அமரபுயங்கனை கோட் (8) புலிக்கும் இவ்விருவற்கும் சமைந்து இத்தர்மம் செய்விக்கிறது. திருவாட்போக்கி மகாதேவர்க்கும் திருப்பள்ளி நம்பிராட்டியாரையும் எழுந்தருளிவித்திருந்த நாடறி (9) புகழன் தாமோதரனை பிள்ளைக் கடியாற்கு நாங்கள் விற்றுக்கொடுத்த நிலவிலையாவணம். எங்களூர் நிலத்து மஹாதேவவதிக்கும் கிழக்கு கற்றளிவா (10) சலுக்குத் தெற்கு முதற்கண்ணாற்று. முதற்சதுரத்துப் பாரத்துவாசன் சடையன்......யன் நிலம் வரி காலே காணியும்; இந் (11) நிலத்துக்குத் தெற்கடையநிலம்.....முக்காணியரைக்காணியும்; இங்கோலாஞ் சதுரத்து மளதசேன் மாதிருசுவான் நிலம் .....யும் மூன்றுமாகாணிய (12) ரைக்காணியும்; ஆக நிலம் இ; இந்நிலம் அரையும் விற்றுக் கொடுத்துக்கொள்வதாக எம்மிலிசைந்தபொருள் அன்றாடு நற்காசு 3 மூன்றும் இந்நிலத்துக்கு (13) சந்திராதித்தவரை நாங்களே இறை இறுக்கக்கடவோமாக; இறைகாவலுக்குக்கொண்ட காசு 20 இருபதும்; ஆகக்காசு இருபத்து மூன்றும் இத்தேவர் பண்டேசுரதேவர் ஸ்ரீஹஸ்தத்தால்கொண்டு இந்நிலம் அரையும் விற்றுக்கொடுத்தோம். பெருங்குறி சபையோம் இந்நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும் இக்காசுக்கு இதுவேபொருள், மாவறுதிப் பொருள் சிலவோலையாவதாகவும் இது வல்லது வேறுபொருள் மாவறுதிப்பொருட்செலவோலை காட்டக்கடவதல்லாததாகவும் இப்பரிசிசைந்து இக்காசு இருபத்து மூன்றும்கொண்டு கோட்புலிக்கு சமைந்து இப்படி விற்றுப்பொருளறக்கொண்டு விலையாவணம்செய்து கொடுத்தோம் பெருங்குறி சபையோம் இந்நிலம்; இப்படியே செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்ளப் பெறுவாராகவும்:

ஸ்வஸ்திஸ்ரீ வீரமேதுணையாகவும் தியாகமே
(2) புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப
நிலமகள் நிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி (3) சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர
ஏனை மன்னவ ரியலுற் றிழிதர
திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி

(4) விஜயாபிஷேகம் பண்ணிவீரஸிம்ஹாஸனத்து புவனிமுழு துடையாளொடும் வீற்றிருந்தருளிய கோ (5) விராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு 43 வது ராஜமகே(6)ந்த்ர வளநாட்டு குறுநாகநாட்டு திருவாட்போக்கிமலை மஹாதேவற்கு திருநுந்தா விளக்கெரிகைக்கு இந்நாட்டு சிவபாத (7) சேகரபுறத்து வியாபாரி கடம்பூருடையான் திருத்தாதயன் பெரியா னேன் இந்நாயனர் திருமாணிக்கதேவற்கு திருப்புறக்கு ஒ(8)டயிலே சந்தி ஒன்றுக்கு திருவிளக்கு ஜோதிவிளக்காக எரிக்கக்கடவோமாக. பிள்ளைச் (9) வணெஸ்வரதேவர்ஸ்ரீஹஸ்தத்திலே நீர்வார்த்த இத்தேவர் ஸிவப்ராஹ்மணரேம் கொண்ட காசு 3. இக்காசு மூன்றும் (10) கொண்டு இக்காசு 3-க்கும் மஹாச..............அரசுக்குடையானும் கவுசியன் (11) சிவவாக்குதேவர் சிவப்பிராமணரேம் கவுசியன் அஞ் சனு......சாத்தனுன திருச்சிற்றம்பல பட்டனும் (12) மகாதேவன் உய்யக்கொண்டானுன தெக்ஷிணாமூர்த்திஸண்டித பண்டிதனும் மகா ஸுரியன் மாணிக்கதேவன் பரஞ்சோதியான் (13) தில்லைநாயகபட்ட னும் இவ்வனைவோம் திருத்தயன் பெரியானிடை இக்காசு 3-ம்கொண்டு பலிசைக்கு சிலவாக (14) சந்தி 1-க்கு திருவிளக்கு 1-க்கு தினம் 1-க்கு சந்திராதித்தவரை நாங்கள் திரு—விளக்கு எரிக்கக்கடவோமானோம். ஒ (15) ருதிருவாக்குப்படி நடந்து............பூஜைப்பணி செய்தானும் சாகரன், நடனும் மாணிக்கதேவன் திருக்கதவந்திறந்து............... ஐஞ்ஞூற்றுவன் போயனும் உய்யக்கொண்டானும் சம்மதித்து இப் பிரமாணம் செய்துகொடுத்தோம், இ.........(18) லகயிலும் மாணிக்க தேவன் மாணிக்கசோதியும் இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக்

கொள்ளப் பெறுவதாகவும் (19) இவ்வனைவோம் இத்திருவிளக்கு எரிகைக்கு திருத்தாதையன் பெரியானுக்கு இவ்வனைவோம் இப்பெரு மக்க (20) ளாக ஸம்மதித்து இப்படி பிரமாணம் செய்துகொடுத்தோம் (இனி கையெழுத்து).

[அம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ள கணபதியாலயத்திலும், பின்னுள்ள மலைச்சரிவிலும் ஏறும்படியிலும் சிலசாசனங்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன.]

இலக்கணவிளக்க பரம்பரை

திருவாரூர்—சோமசுந்தரதேசிகர்.

---

உ

கடவுள் துணை.

## தமிழணங்கு தம் மக்களுக்கு அறிவுறுத்தல்.

எல்லாம்வல்லஇறையனூர்வாயில்
ஆரியமென்னும்அருஞ்சகோதரன்பின்
தங்கையாய்ப்பிறந்தசகோதரியானே
சகத்தினில்வந்தஅகத்தியமுனிவரால்
வளர்க்கவளர்ந்தமங்கையும்யானே
வேங்கடங்குமரிவேலைசூழெல்லையில்
பாங்குடன்பயிலும்பாவையும்யானே
அகரஇகரஉகரமாகிய
மந்திரஎழுத்தால்வாய்ந்ததும்யானே
வல்லினமெல்லினஇடையினமாகிய
மூவகைமெய்யால்முனைந்ததும்யானே
தமிழெனுஞ்சொற்குச்சான்றோர்யாரும்

அமிழ்தினும்இனிதெனஅறைந்தனர்பொருளே
முதலிடைகடையெனும்மூன்றுசங்கத்தும்
இயலிசைநாடகமெனும்முத்தமிழாய்
பதினாயிரத்துத்தொண்ணூறாண்டு
நூற்றுத்தொண்ணூற்றெழுவர்பாண்டியரால்
எண்ணாயிரத்தறுநூறுபாவலரால்
வளர்க்கப்பெற்றமடந்தையும்யானே
சீதையைத்தேடிச்சென்றவானரர்க்கு
வழிமுழுதுணர்த்தியவானரத்தலைவன்
நான்செழித்திருந்தநான்மாடக்கூடலைச்
சொற்றதாலென்றன்தொன்மையையறிக
திரிபுரமெரித்தவிரிசடைக்கடவுளும்
குன்றமெறிந்தகுமாரதேவரும்
சங்கத்திருந்துதமிழாய்ந்தனரெனில்
இங்கென்பெருமையியம்புவார்யாரே
தொண்டர்தோழனார்தூதுபோனதும்
கணிகண்ணற்காய்க்காஞ்சியைநீங்கி
மணிவணப்பெருமாள்வழிநடைகொண்டதும்
என்பொருட்டென்பதையினிதினுணர்க
ஒல்காப்பெரும்புகழ்த்தொல்காப்பியமாய்ச்
சிவபெருமானேதிருவாய்மலர்ந்து
தம்பெயர்நாட்டியதமிழிலக்கணமாய்
சிந்தாமணிமுதலைந்துகாவியமாய்
உள்ளமினிக்கும்வள்ளுவர்நூலாய்
உம்பரும்வியக்குங்கம்பர்காவியமாய்த்
திருத்தேவாரமாய்த்திருவாய்மொழியாய்
அரியபுராணமாம்பெரியபுராணமாய்
மற்றுளநூலாய்வாய்ந்ததும்யானே

ஆரியம்செந்தமிழானுனென்று
பரசிவன்உருவமாய்ப்பகரவும்பெற்றேன்
திருமாலுருவெனச்செப்பவும்பெற்றேன்
சபதங்கூறுவோர்தமிழ்மேலாணை
கூறவும்பெற்றகுலக்கொடியானே
இன்னும்என்பெருமையியம்பவும்போமோ
பெருநிலவேந்தரும்குறுநிலமன்னரும்
சைவவைணவசமயகுரவரும்
புத்தரும்சமணரும்போற்றப்பெற்றயான்
ஆங்கிலபாஷையணுகியபின்னர்ப்
பெற்றதாயைப்பேணார்போல
உற்றுநோக்குவாரொருவருமின்றித்
தளர்வுறுகின்றனென்தளர்வைநீக்குமின்
கம்பரென்பாகலந்ததென்றாற்போல்
என்மொழிகலந்தேயியம்புவதோர்மின்
ஐரோப்பாவிலமர்ந்தபசுவும்
அம்மாவென்றேயறைவதையறிமின்
பாஷாபிமானம்பாரிலின்றெனில்
தேசாபிமானம்சிறிதுமின்றாம்
ஆகையாலென்னை ஓகையாய்த்தழுவி
முன்போலென்னைமுதிர்வுறச்செய்து
'வாழுமின்வாழுமின்வாழுமின்னீரே.

ஸ்ரீ. சதாசிவம்பிள்ளை,
9—12—18] நாஷனல் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்.